www.tamilarangam.net

# செம்பதாகை

*புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு*

இதழ் 6

ஜூலை 2010

**புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின்**
**5வது அனைத்து இலங்கை மாநாட்டு ஆவணங்கள்**

## 1 சமகால உலக அடிப்படையை விளங்கிக் கொள்ளல்

## 2 சர்வதேச நிலைமை

## 3 தேசிய நிலைமை

**கவிதைகள்:** ***ஜோஸெ மரியா ஸிஸொன்***
***இராகலை பன்னீர்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**ஆசிரியர் தலையங்கம்**

# மக்கள் முன்னாலுள்ள சவால்கள்

வருட முற்பகுதியில் சனாதிபதித் தேர்தல் சொல்லிய செய்தியையே ஏப்ரல் மாதம் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மீளவும் சொல்லின.

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்கான நன்றியைச் சனாதி பதித் தேர்தலில் ராஜபக்சவின் தலைமைக்குக் காட்டியது போலவே சிங்கள மக்கள் பொதுத் தேர்தலிலும் நடந்துகொண்டனர். அரசாங் கத்தின் கொள்கைகளிலிருந்து தெளிவாக வேறுபடுத்தக்கூடிய மாற்றுக் கொள்கைகளோ நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான மாற்று வேலைத்திட்டமோ இல்லாத எதிர்க் கட்சிகளால் மக்களுக்கு நம்பிக் கையூட்ட இயலவில்லை. அதற்கும் மேலாகச் சனாதிபதித் தேர்தலிற் பயன்பட்டவாறே, அரச ஊடகங்கள் உட்பட்ட அரச வளங்களும் அதிகார வலிமையும் வன்முறையும் மிரட்டலும் கேட்பாரின்றிப் பிரயோ கிக்கப்பட்டன.

குறைந்ததொரு பாராளுமன்றப் பெரும்பான்மை வலிமையுடனேயே மூன்றிலிரண்டு பங்குப் பெரும்பான்மையை விலைக்கு வாங்கக் கூடிய ஒரு பாராளுமன்ற அரசியற் பின்புலம் இருக்கையில், ஏறத்தாழ மூன்றி லிரண்டு பங்குப் பெரும்பான்மையை வென்றுள்ள அரசாங்கம், மூன்றி லிரண்டு பெரும்பான்மைக்குத் தட்டுப்பாடாகவுள்ள ஆறு ஆசனங்கட்கு வலை வீச முன்னரே, தம்மை விற்பதற்கு ஆயத்தமென எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சைகை காட்டியுள்ளார்கள்.

சனாதிபதி குடும்பத்தின் ஆட்சியை நிரந்தரமாக்குவதற்கான பணிகள் இப்போது மும்முரமாக்கப்பட்டுள்ளன. வரப்போவதாக மிரட்டிக் கொண்டிருக்கும் தனிமனித, குடும்ப, கும்பல் ஃபாசிச சர்வாதிகார ஆட்சி வராமற் தடுக்கப் பாராளுமன்ற அரசியலையோ எதிர்க் கட்சி களையோ நம்பியிருக்க முடியாது. அதற்கெதிரான உறுதியான புரட்சி கர மாற்று அரசியல் வடிவம் ஒன்று விருத்தி செய்யப்படவேண்டும்.

சிங்கள மக்களைப் பீடித்திருக்கும் பாராளுமன்ற அரசியலிலிருந்து அவர்களை மீட்பதானால், சிங்கள முற்போக்கு, இடதுசாரிச் சக்திகள் அந்த அரசியலிருந்தும் என்.ஜி.ஓ. உறவுகளிலிருந்தும் தங்களைப் பூரணமாக மீட்டெடுத்துக் கொள்ள வேண்டும். சிங்கள மாக்சிச லெனி

னிசவாதிகள், தங்களை அமைப்புமுறையாகக் கட்டியெழுப்பி அரசியல் வேலைகளை முன்னெடுக்காமல், தவறான அரசியற் போக்குக்கட் கெதிராகப் போராட இயலாது. ஏதிர்வரவுள்ள நெருக்கடிமிக்க காலம், ஃபாசிச சர்வாதிகாரத்திற்குப் பணிந்து போவதற்கும் புரட்சிகர அமைப் பாக ஒழுங்கமைப்பதற்குமிடையே தெரிவு எதையும் விட்டுவைக்காது.

சிறுபான்மைத் தேசிய இனங்களைப் பொறுத்தவரை, அவர்கள் மீதான ஒடுக்குமுறை மோசமாவதற்கான வாய்ப்புக்களே அதிகம். அவர்களது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் குறைக்கும் முயற்சி களில் அரசாங்கம் தீவிரமாக உள்ளது. அவர்களது பாராளுமன்றப் பிரதிநிதிகள் தங்களது சுயநலத்தைப் பேணுவதற்காகத் தங்களது மக்களின் நலன்களை இதுவரை புறக்கணித்துக் காட்டிக் கொடுத்து வந்தது போலவே இனியும் நடப்பர் என்பதிலும் ஐயம் வேண்டாம். எனவே மாற்று அரசியலுக்கான தேவை சிங்கள மக்களை விட அவ சரமாகத் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களுக்கே உண்டு. அவ் வகையிற் சென்ற சில மாதங்களில் நடந்த தேர்தல்களில் அவர் கள், குறிப்பாகத் தமிழ் மக்கள், தேர்தல் பற்றிக் காட்டியுள்ள அக்க றையீனம் ஒரு சாதகமான அம்சமாகும். அது எவ்வாறு மாற்று அரசிய லாக வளர்த்தெடுக்கப் படக்கூடும் என்பது அவர்களிடையேயுள்ள முற் போக்கு, இடதுசாரிச் சக்திகளின் கையிலேயே உள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி அந்நிய ஊடுரு வல் வலுத்து வருகிறது. முக்கியமாக, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்ற விசாரணை, ஐ.எம்.எவ். நிபந்தனைகள் என்ற வடிவங் களில் மேற்குலகும், வர்த்தக உடன்படிக்கைகள் முலமும் தேசிய இனப் பிரச்சனையில் தலையீட்டின் மூலமும் இந்தியாவும், தங்கள் அரசியல், பொருளாதாரப் பிடிகளை வலுப்படுத்துகின்றன. யப்பானும் ஐரோப்பிய நாடுகளும் தமது பொருளாதாரப் பிடியை வலுப்படுத்தி வரும் அதே வேளை, சீனாவும் பல்வேறு உட்கட்டுமான, நிர்மாண, அபிவிருத்தி வேலைகளின் மூலம் தனது செல்வாக்கை வலுப்படுத்தி வருகிறது. இலங்கை அந்நிய மூலதனத்தினதும் ராணுவ-அரசியல் ஆதிக்கத்தின தும் போட்டிக்களமாகிச் சீரழிவதைத் தடுக்கவும் பிரதான முரண்பாடான தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு அடிப்படைத் தேவையாகிறது.

இந்த நிலையில் ஜூன் இறுதி வாரத்தில் நடந்து முடிந்த புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிக் கட்சியின் ஐந்தாவது தேசிய மாநாடு மாற்று அரசியலுக்கும் மக்கள் போராட்டத்துக்குமான நம்பிக்கைகட்குப் புத்துயிரூட்டியுள்து. மாநாட்டு ஆவணங்களை இவ்விதழில் வழங்கு வதில் செம்பதாகை பெருமை கொள்கிறது.

*****

**புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிக் கட்சியின்**
**5வது அனைத்து இலங்கை மாநாட்டு ஆவணங்கள் - 1**

# சமகால உலக அடிப்படையை விளங்கிக் கொள்ளல்

உயர் தொழில்நுட்பத் துணையுடனான ஏகாதிபத்தியப் பூகோளமயமாத லினால் சிக்கலான உழைப்புப் பிரிவினை அல்லது தொழிற் பிரிப்புகள் ஏற்படுத்தப்பட்டு உழைப்பவர்களிடையே தொழிற் பிரிப்பின் அடிப்படை யில் முரண்பாடுகளை அதிகமாக்கியுள்ளன. இதனால் தொழிலாளர் வர்க்கத்தின் சர்வதேசரீதியான ஐக்கியம் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறது. அதே வேளை கொலனித்துவத்தினால் நாடுக ளுக்குள் ஏற்படுத்தப்பட்ட இன, மத, சமூக முரண்பாடுகள் அரைக் கொலனித்துவ – நிலப்பிரபுத்துவ காலத்தில் மேலும் கூர்மையடைந்த தால், கொலனித்துவத்தின் நேரடியான அரசியற் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட நாடுகளுக்குள் தொழிலாளர் – விவசாயிகளின் ஐக்கி யம் வலுப்படுத்தப்பட்டு சோஷலிஸப் புரட்சிகட்கு வழி ஏற்படாத நிலைமை கொடுமையானது. சோஷலிஸத்திற்கு எதிரான 'நலன்புரி அரசுகள்' என்பனவும் தொழிலாளர்களின் சமூக மாற்றம் நோக்கிய பயணத்திற்குப் பல தடைகளை ஏற்படுத்தின. நாடுகள் முற்றாக நவ கொலனித்துவப் பிடிக்குள் இறுகி, சோஷலிஸ நாடுகள் வீழ்ச்சி யடைந்த நிலையில், முதலாளித்துவத்தின் சிக்கல்களிலிருந்து நிலை மைகளைத் திசை திருப்ப, நாடுகளுக்குள் இன, மத, முரண்பாடுகள் மேலும் அதிகரிக்கப்பட்டு, ஒரே நாட்டிற்குள் ஒரே தொழிலில் ஈடுபட் டுள்ள தொழிலாளர்களிடையே இன, மத, தொழிற் துறை ரீதியான தொழிற் பிரிப்புகள் ஏற்பட்டு தொழிலாளர் வர்க்க ஐக்கியம் சித றடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு நாட்டிற்குள் தொழிலாளர் வர்க்கத் தின் ஐக்கியமும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறது.

சோஷலிஸ நாடுகளின் வீழ்ச்சியும், தொழிலாளர்களிடையே ஐக்கி யத்தின் சிதறடிப்பும் காரணமாக இன, மத, பால் முரண்பாடுகள் ஆளும் வர்க்கத்தினாலும் திட்டமிட்ட ஏகாதிபத்தியச் செயற்பாடுகளி னாலும் பகை முரண்பாடுகளாக்கப்பட்டுள்ளன. இந் நிலையில், உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலானதும் முதலாளித்துவம்/ ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிஸத்திற்கும் இடையிலானதுமான முரண் பாடு இன்னும் அடிப்படை முரண்பாடா, உலகை உழைப்போரின் உலகாக மாற்றிச் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காக உழைப் போரின் புரட்சிகர தத்துவமான மாக்சிசமும் அதன் நடைமுறை அனு பவங்களும் ஏற்புடையனவா, செல்லுபடியானவையா என்பன போன்ற கேள்விகள் திரும்பத் திரும்ப முதலாளித்துவ புத்திஜீவிகளாலும், ஏகாதிபத்தியத் தகவல் தொடர்புச் சாதனங்களாலும் என்.ஜீ.ஓக்களா

லும் ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்ட பின்நவீனத்துவத்தினாலும் ஏகாதிபத்தியத்தினால் போதிக்கப்படுகின்ற நவகொலனித்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ள தேசியவாதிகளாலும் எழுப்பப்படுகின்றன.

இதற்கான சிறிய விளக்கமளிக்கும் வகையில் சில பகிர்வுகளைச் செய்துகொள்ள எமது கட்சியின் 5வது மாநாடு தீர்மானித்துள்ளது.

அதன்படி, மாக்சிச அடிப்படையில் இன்றைய உலகின் அடிப்படைகளை விளங்கிக் கொள்வது மிகவும் அவசியமாகிறது.

முதலாளித்துவத்தின் உயர்ந்த வடிவமான ஏகாதிபத்தியத்தின் தோற்றமே முதலாளித்துவத்தின் நெருக்கடி தான். அதே போன்று, ஏகாதிபத்திய பூகோளமயமாதல் நிகழ்ச்சி நிரலும் ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி தான். முதலாளித்துவத்தின் தோற்றத்திற்கு முந்திய/பிந்திய காலகட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட நாடுகளைப் பிடித்து நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கொலனித்துவ–ஏகாதிபத்திய முறை, 1950 களுடன் பெரும்பாலும் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் கொடுப்பது என்ற அடிப்படையில் நாடுகள் மீதான நேரடிக் கட்டுப்பாடு கைவிடப்பட்டது. தொடர்ந்தும் பல வகைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் கட்டுப்பாட்டைச் செலுத்தும் தனியொரு ஏகாதிபத்திய நாட்டினுடைய மையம் என்ற நிலைமைக்கு மாறாக நவகொலனித்துவ ஏகாதிபத்தியமாக மாற்றமடைந்தது. இந்த மாற்றத்துடன் 1970களில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகளிலிருந்து ஏகாதிபத்தியம் மெல்ல மெல்லத் தன்னை மீண்டும் தகவமைத்துக் கொண்டது. அதனுடைய திறந்த, நவதாராளவாதப் பொருளாதாரக் கொள்கை 1990களில் பூகோளமயமாதல் எனும் நிகழ்ச்சிநிரலுடனும், பயங்கரவாதத்திற்கு எதிரான போரென்ற தந்திரோபாயத்துடனும் தன்னை மீள நிலை நிறுத்திக் கொண்டது.

1960இற்குப் பிறகு முன்னாள் சோவியத் யூனியனில் ஏற்பட்ட திரிபுவாத நகர்வுகளின் தொடர்ச்சியாக மீள முதலாளித்துவ மாக்கப்பட்ட சோவியத் யூனியன் என்ற கட்டமைப்பும் 1992இல் முற்றாகவே சிதைக்கப்பட்டதும் கிழக்கு ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ மாற்றங்களும் சீனா முதலாளித்துவப் பாதையில் பயணிப்பதும், ஏகாதிபத்தியப் பூகோளமயமாதலுக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற தந்திரோபாயத்திற்கும் இடைஞ்சலற்ற சூழலை ஏற்படுத்த உதவின எனலாம்.

ஏகாதிபத்தியப் பூகோளமயமாதல் பற்றிக் கம்யூனிஸ்ட் அறிக்கையில் கார்ல் மாக்ஸ் குறிப்பிட்டுள்ளதை அவதானிப்பது அவசியம்.

“உற்பத்திச் சாதனங்களையும் உறவுகளையும் அவற்றுடன் சமூகத்தின் முழு உறவுகளைத் தொடர்ச்சியான மாற்றத்திற்குள்ளாக்காமல் பூர்ஷுவாக்களால் நிலைத்திருக்க முடியாது. உற்பத்தி முறைகளை

அப்படியே மாற்றாது பாதுகாத்து வைப்பதிலேயே ஆரம்ப காலக் கைத் தொழில் முதலாளி வர்க்கத்தின் இருப்புத் தங்கியிருந்தது. உற்பத்தி யில் தொடர்ச்சியான மாற்றம், அனைத்துச் சமூக நிலைமைகளினதும் இடையறாத கலவரமானதன்மை, முடிவுறாத நிச்சயமற்ற தன்மை, எதிர்ப்புகள் என்பன பூர்ஷ்வா காலத்தை ஏனைய காலங்களிலிருந்தும் வேறுபடுத்துகிறது.

“உற்பத்திகளுக்குத் தொடர்ச்சியாக சந்தைகளை விரிவாக்குவதற் கான தேவை, பூகோளத்தின் மேற்பரப்பெங்கும் பூர்ஷ்வாக்களைத் துரத்தும். அதனால் அவர்கள் எல்லா இடங்களிலும் சௌகரியமாக இருப்பதுடன் எல்லா இடங்களிலும் குடியேறுவர். எல்லா இடங்களிலும் தொடர்புகளை நிலைநிறுத்துவர்’’. (கார்ல் மாக்ஸ், கம்யூனிஸ்ட் அறிக்கை). இதன் மூலம் கார்ல் மாக்ஸ் முதலாளித்துவம் உலகமய மாவதன் பொதுவான தன்மையை பற்றியே கூறியுள்ளார்.

லெனின் வகைப்படுத்திய முதலாளித்துவத்தின் உயர்ந்த வடிவமான ஏகாதிபத்தியத்தின் தோற்றத்திற்கு முன்பு, சந்தைகளைத் தேடுவதற் கும் வர்த்தகத்தை மேற்கொள்வதற்குமாகவே முதலாளித்துவத்தின் பூகோளமயமாதல் இருந்தது. போர்த்துக்கேய, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனி, டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி, பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பனி போன்றவை அவற்றின் வியாபார மூலதனத்துடன் (Merchant Captial) உலகெங்கும் செயற்பட்டன.

இவ்வாறான வணிக மூலதனம் (Commercial Captial) கொலனித்து வத்திற்கு அடிப்படையானது. இதனால் புகையிரதப் பாதை, மின்சாரம், தந்தி, தொலைத்தொடர்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரிய தொழிற்துறைகள் ஏற்படுத்தப்பட்டன. அத் தொழிற் துறைகட் கான மூலப் பொருட்களைத் தேடிக் கொள்ளும் விதமாகப் பல நாடு கள் மீது பலமிக்க முதலாளித்துவ நாடுகள் நேரடி ஆதிக்கம் செலுத் துவதாக அதன் செயற்பாடு அமைந்தது. அதற்காக ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கம்பனிகளின் சுரங்கங்கள், பெருந்தோட்டங்கள், வீதி களையும் புகையிரதப் பாதைகளையும் அமைத்தல், போக்குவரத்து, ஏற்றுமதி இறக்குமதி போன்றவற்றில் தொழிலாளர்கள் பெருமளவில் உள்வாங்கப்பட்டுக் கொலனித்துவத்திற்கு எதிரான சிந்தனைகள் மழுங் கடிக்கப்பட்டன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பலமிக்க முதலாளித்துவ நாடுகள் பலமற்றவற்றை விழுங்கிக் கொண்டன. பாரிய தொழிற்துறை, நிதி நிறுவனங்கள் அமைக்கப்பட்டு அவை தேசிய, சர்வதேச சந்தைகள் மீது ஆதிக்கம் செலுத்தின. அவற்றினால் ஏற்பட்ட விளைவுகளைக் கார்ல் மாக்சும், ஏங்கல்சும் ஆராய்ந்து அடிப்படைப் பொருளாதார விதிகளையும், முதலாளித்துவ சமூகத்தில் வர்க்க முரண்பாட்டையும்

அவற்றை மாற்றுவதற்கான விஞ்ஞானபூர்வமான சோஷலிஸத்தின் தேவையையும் முன்வைத்தனர். அவை இன்றும் ஏற்புடையன.

20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முதலாளித்துவப் போட்டி ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியடைந்து பொருளாதார அரசியல் நிலை மைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. அவை சோஷலிஸத்தை அமைப்பதற்கான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களில் பின்னிடைவு களை ஏற்படுத்தின.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் திலும் போட்டி மிகுந்த முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக மாறியது. இந்த வளர்ச்சியை, அதாவது பூகோளரீதியான ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியை, லெனின் ‘ஏகாதிபத்தியம், முதலாளித் துவத்தின் உச்சக் கட்டம்’ என்ற அவரது ஆய்வில் சரியாக மதிப் பிட்டுத் தொழிலாளர் வர்க்கப் புரட்சி புதிய சூழ்நிலைக்கேற்ப முன்னெ டுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நிரூபித்தார்.

தொழிற் துறை மூலதனம், வங்கி மூலதனம் என்பவற்றின் இணைப் பான நிதி மூலதனத்தின் கட்டுப்பாடும் அபிவிருத்தியுமே ஏகபோக முதலாளித்துவத்தின் சாரம் என்பதை லெனின் நிரூபித்தார். ஏகாதி பத்திய சக்திகள் முழுப் பூகோளத்தையும் தமது செல்வாக்கிற்குள் கொலனிகளாகக் கொண்டு வந்து தமது சுரண்டலுக்கேதுவாக நாடு களின் எல்லைகளை மாற்றியமைத்தன.

மூலதனத்தின் ஏற்றுமதியினை லெனின் ஏகாதிபத்தியத்தின் பிரதான அம்சம் என்பதை எடுத்துக் காட்டினார். அபிவிருத்தியடையாத நாடு களுக்குள் கம்பனிகளினூடாக வெளிநாட்டு மூலதனம் சென்றடைந் ததை எடுத்துக் காட்டினார். அபிவிருத்தியடையாத நாடுகளின் தொழி லாளர்களுக்குக் குறைவான கூலியைக் கொடுப்பதன் மூலம் மீயுயர் லாபத்தையும் (super profit) கம்பனிகள் பெற்றுக் கொண்டன. ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டம், சுரங்கம், உட்கட்டமைப்பு மூலப் பொருட் கள் போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டது. அப்போதைய வளர்ச்சி யடைந்த தொழில்நுட்பமானது தந்தி-தொலைத்தொடர்பு, ரயில், நீரா விக் கப்பல், கால்வாய், கனரக கைத்தொழில் என்பனவாக இருந்தது. அதன்மூலம் உற்பத்தியும், நிர்வாகமும், வர்த்தகமும் ஏகாதிபத்திய நாடுகளை மையப்படுத்தி இருந்தன. அதனால் ஏகாதிபத்திய நாடு களின் தொழிலாளர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் கொலனிகளிலும் அரைக் கொலனிகளிலும் தொழிலாளர் களும் விவசாயிகளும் கடுமையாகச் சுரண்டப்பட்டனர், அடக்கப்பட்ட னர். உலகத் தொழிலாளர்கள் இவ்வாறு ஏகாதிபத்திய நாட்டுத் தொழி லாளர்களாகவும் கொலனித்துவத் தொழிலாளர்களாகவும் வேறுபடுத் தப்பட்ட இயங்குமுறையில் உலக முதலாளித்துவ முறைமை செயற் பட்டது. ஒரு கொலனி நாட்டிலிருந்து இன்னொரு கொலனிக்குத்

தொழிலாளர்கள் புலம்பெயர்க்கப்பட்டனர். வல்லமையான நாட்டுப் புலமைசார் தொழிலாளர்கள் கொலனிகளில் சில சலுகைகளுடன் தொழில் செய்யும் நிலையும் ஏற்பட்டது. அத்துடன் இனத்துவ, பிரதேச அடிப்படையிலும் தொழிலாளர்கள் பிரிக்கப்பட்டனர்.

இன்றைய பூகோளமயமாதலில் விஞ்ஞான-தொழில்நுட்ப புரட்சியின் மூலம் உலகப் பொருளாதாரப் பண்புகளில் புதிய பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது உண்மை.

ஏகாதிபத்தியமானது முதலாளித்துவ முறைமையை விரிவுபடுத்திய துடன் கூலி அடிமை முறையையும் விஸ்தரித்தது. உலகெங்கும் கோடிக்கணக்கான தொழிலாளர்களின் பங்கெடுப்புடனான உற்பத்தி முறைமையை உலகெங்கும் விஸ்தரித்தது. இதன் ஒரே நோக்கம் முதலாளித்துவச் சுரண்டலை அதிகரித்து லாபத்தை குவித்து முதலா ளித்துவ உற்பத்தி முறையைப் பாதுகாத்து முன்னெடுப்பதாகும். அதனாலே சமத்துவமின்மையும் வறுமையும் தலைவிரித்தாடுகின்றன.

அதன் விளைவாக ஏகாதிபத்தியம் தொழிலாளர்களிடையே சலுகை களை வழங்கி ஒரு மேல் தட்டினரை ஏற்படுத்தியது. சலுகையற்ற வர்கள் கீழ்த் தட்டினராகினர். இதனால் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும், தொழிலாளர் வர்க்கப் போராட்டமும் மழுங்கடிக்கப்பட வாய்ப்பானது. ஏகாதிபத்திய நாடுகளினுள்ளும் வெளியிலும் தொழிலா ளர்களிடையே மேல்தட்டு, கீழ்த்தட்டு என்ற தொழிற் பிரிப்பை ஏற்ப டுத்தி ஏகாதிபத்திய நாடுகளிலும் வர்க்கப் போராட்டத்தை மழுங்க டிக்கத் திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏகாதிபத்தியப் பூகோளமயமாதல் நிகழ்ச்சி நிரலின் இந் நிலைமை யில் வித்தியாசமான வளர்ச்சிகள் கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்டுள்ளதைக் காண முடியும்.

சோவியத் யூனியனையும், கிழக்கு ஐரோப்பிய சோஷலிஸ நாடு களையும் ஏகாதிபத்தியம் வெற்றி கண்டதையடுத்துக் குறைந்த கூலிக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்கள் பெருமளவில் நேரடி, மீயுயர் சுரண்டலுக்கு இலக்காக்கப்படுவது வேகமாக அதிகரித்துள்ளது. பாரிய அபிவிருத்திக்காகச் சந்தைப் பொறிமுறையைப் பயன்படுத்த வேண்டும் என்று முன்மொழிந்தவர்களை முதலாளித்துவப் பாதையை நோக்கிச் செல்வோரெனத் தோழர் மாஓ சேதுங் ஒதுக்கி வைத்ததார். ஆனால் தற்போது அந்தச் சந்தைப் பொறிமுறையே சீனாவை இலகுவாகக் கவ்விக் கொண்டுள்ளது. இதுவும் முதலாளித்துவ இருப்பிற்கு உறு துணையானது.

நிகழ்ந்துள்ள விஞ்ஞான, கணணி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி கள், பொருளுற்பத்தியிலும், சேவைத் துறையிலும் புதிய உழைப்பு முறைமைகளை ஏற்படுத்தின. அதாவது தானாகச்செயற்படும் இயந்திர இயங்குமுறை, றோபோ, கணணிமயமாக்கல் போன்றன திறனுழைப்பு

என்பதையும் கட்டுப்படுத்தின. இதனால் திறன்கொண்ட உழைப்பாளர்களும் உற்பத்தி முறையிலிருந்து விலக்கப்படலாயினர்.

விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சிகளினால் ஏற்பட்ட போக்குவரத்து, தொடர்பாடல், இணையத் தொழில்நுட்பம், மென்பொருள் அபிவிருத்தி போன்றவற்றினால் புதுவகையான உழைப்புப் பிரிப்பு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ளது. இது கார்ல் மாக்ஸ் கூறிய வேலைத் தளத்திலிருக்கும் உழைப்புப் பிரிப்பை விட வித்தியாசமானதாக, சமூக ரீதியான உழைப்பின் சமூகப் பிரிப்பாக அமைகிறது. புதிய தொழில் நுட்பம் உலகளாவிய ரீதியில் பழைய-புதிய முறைகளைக் கொண்டு உற்பத்தி முறைமையை மீள ஒழுங்கமைக்கவும் தகவமைக்கவும் புதிய வழியை ஏற்படுத்தியது. இந்த முறையைக் கொண்டு பன்னாட் டுக் கம்பனிகள் அபிவிருத்தி குறைந்த நாடுகளில் குறைந்த கூலிக்குத் தொழிலாளர்களை உலகளாவிய ரீதியில் தேடிக் கொள்ளவும், ஏகாதி பத்திய நாடுகளுக்குள்ளும் குறைந்த கூலிக்குத் தொழிலாளர்களைத் தேடிக்கொள்ளவும் அவர்களை நவீன உற்பத்தி முறைமைகளுக்குள் உள்வாங்கவும் இயலுமாக்கியது. இதனால் ஏகாதிபத்திய மீயுயர் சுரண் டல் எல்லைகளற்றதாக உலகளாவிய ரீதியில் விரிவாக்கப்பட்டது. இதனால் தொழிலாளர்களும் உலகளாவிய ரீதியில் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றுடன் இன்னுமொரு முக்கிய அம்சமாக மக்கள் சொந்த நாடு களிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பெருமளவில் புலம் பெயர்ந்து போவதும் இன்னுமொரு சிக்கலான உழைப்பு பிரிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் உள் நாட்டு அரசியல் அடக்குமுறைகளினாலும் உள்நாட்டு யுத்தங்களி னாலும் புலம்பெயர்ந்தவர்கள், அபிவிருத்தியடைந்த நாட்டுத் தொழி லாளர்களின் வேலைவாய்ப்பில் தலையிடுபவர்களாகவும் தாம் முன்னர் வாழ்ந்த நாட்டுத் தொழிலாளர்களைவிடச் சலுகை கொண்டவர்களாக வும் மாறுகின்றனர். இதனால் வளர்ச்சியடைந்த அல்லது ஏகாதிபத்திய நாடுகளில் சலுகை பெற்ற தொழிலாளர்களுக்கும் வளர்ச்சியடையாத நாடுகளின் தொழிலாளர்களுக்குமிடையே காணப்பட்ட உழைப்புப் பிரிப்பு, புலம்பெயர்ந்தவர்களைக் கொண்ட உழைப்புப் பிரிப்பொன் றையும் ஏற்படுத்தியுள்ளது. இது பூகோளமயமாதலின் விளைவாக, உலகத் தொழிலாளர் வர்க்கத்தினரின் ஐக்கியத்திற்குக் குந்தகம் விளைவிப்பதாக இருப்பதும் இன்னொரு சிக்கலான விடயமாகும். இவ் வாறான சூழ்நிலை ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் ஏற்பட்டுள்ளதை அவ தானிக்க முடியும். கொலனியாதிக்கக் காலத்திலிருந்து ஏற்பட்ட உள் நாட்டுப் பொருளாதார நெருக்கடிகளினால் ஆளும் வர்க்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட தேசிய இன ஒடுக்குமுறை உட்பட்ட சகல ஒடுக்கு முறைகளும், தற்போதைய பூகோளமயமாதலின் கீழ் அந்த ஒடுக்கு

www.tamilarangam.net

முறைகளின் புதிய வடிவத்திலான தொடர்ச்சிகளும் தொழிலாளர் வர்க் கத்தின் ஐக்கியத்தைப் பல சவால்களுக்குட்பட்டதாக்கி இருக்கிறது.

ஆக, ஏகாதிபத்திய யுகம் இன்னும் முடிவிற்கு வரவில்லை. அதனை முடிவிற்குக் கொண்டு வர உலகத் தொழிலாளர் வர்க்கம் இருபதாம் நூற்றாண்டில் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளிலும் வியட்நாமிலும் சீனத்திலும் கம்யூனிஸ்ட்டுகள் அதிகா ரத்தை நிலைநாட்டிக் கொண்டு எடுத்த முயற்சிகள் ஏகாதிபத்தியத் தினால் முறியடிக்கப்பட்ட பிறகும், ஏகாதிபத்திய யுகம் பூகோளமய மாதல் எனும் நிகழ்ச்சி நிரலுடன் தொடர்கிறது. ஆனால் பூகோள மயமாதல் நிகழ்ச்சி நிரலும் பலவிதமான நெருக்கடிகளுக்கு ஆளாகி யுள்ளது. குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் ஏனைய முதலா ளித்துவ நாடுகளினதும் நிதி நெருக்கடியும் பொருளாதார வீழ்ச்சியும் அதற்குச் சான்றாகும்.

எனவே, ஏகாதிபத்திய யுகத்திற்குரிய பதில் லெனினிசத்தில் இருக் கிறது. அதனைத் தற்கால மாற்றங்களுக்கு ஏற்பப் பொதுவாகவும் குறிப்பாகவும் செழுமைப்படுத்திய ஆயுதமாகத் தொழிலாளர் வர்க்க மும் ஏனைய சுரண்டப்படும் வர்க்கங்களும், அடக்கவும் ஒடுக்கவும் படும் மக்களும் கையிலெடுக்க வேண்டியதன் அவசியம் இன்னும் செல்லுபடியற்றதாகி விடவில்லை.

பூகோளமயமாதலின் தகவல் தொடர்பாடல், றோபோ, கணணி. அதி தொழில்நுட்பம் போன்றன உழைப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து விட்டதாகக் குழப்பமான வியாக்கியானங்கள் கொடுக்கப்படுவதுண்டு. தகவல், அறிவு பற்றிய உரிமை சாதாரண மக்களுக்குமானது என்பது சோஷலிஸத்தின் விளைவாகும். அந்த வகையிலேயே தொடர்பாடல், தகவல், அதிதொழில்நுட்பங்களையும் சாதாரண மக்களைக் கொண்டே இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

உற்பத்தியில் முக்கிய இயங்கு விதியாக இருக்கும் மேலதிகப் பெறுமானத்தைக் கணணிகளோ, றோபோக்களோ உருவாக்குவ தில்லை. உழைப்பை வழங்கும் தொழிலாளர்களே உருவாக்குகிறார் கள். றோபோவோ யந்திரமோ லாபத்தைச் சம்பாதிப்பதில்லை. ஊதி யத்தைப் பெறாத மனித உழைப்பே லாபத்தை வழங்குகிறது என்ற உண்மையை முதலாளித்துவ ஊடகங்களும், புத்திஜீவிகளும் மறைக் கின்றனர்.

அதி தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதன் நோக்கம், குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டு, குறுகிய நேரத் தில் கூடிய உற்பத்தியை மேற்கொள்வதாகும். ஆனால் அதி தொழில் நுட்பப் பிரயோகம் உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்வதுடன் லாபத்தைக் குறைக்கிறது. அதனால் உற்பத்தியை மிகவும் அதிகரிக்க வேண்டி வருகிறது. ஆனால் அந்த உற்பத்தியை உலக முதலாளித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

துவச் சந்தையில் விற்க முடிவதில்லை. இது முதலாளித்துவத்தின் மிகை உற்பத்தியாவதுடன் மேலும் பொருளாதார நெருக்கடிகளை அதிகரிக்கச் செய்து தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தைத் தூண்டுகிறது.

மனித சமூகம் இருக்கும் வரையும், பொருளுற்பத்தியும், சேவையும் இன்றியமையாததவையாக இருக்கும். அங்கே உழைப்பே மேன்மையான தும், மேலாதிக்கம் செலுத்த வேண்டியதுமாகும். மக்களின் தேவைக் கேற்பப் பொருளுற்பத்தியும், சேவை வழங்கலும் இருக்கும் போது லாப நோக்கம் கொண்ட மிகை உற்பத்தியை நாட வேண்டிய முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அவசியமில்லை. தேவையை அடிப்படையாகக் கொண்ட பொருளுற்பத்தியையும் சேவை வழங்கலை யும் சோஷலிஸ முறையாலேயே உறுதி செய்ய முடியும். அங்கு உற்பத்திச் சாதனங்கள் சுதந்திரமாக இருக்க முடியும்.

சோஷலிஸமே முதலாளித்துவ ஏகாதிபத்திய பொருளாதார நெருக் கடிகளுக்குத் தீர்வாகும் என்பது மீண்டும் நிரூபிக்கப்படுகிறது. ஆனால் அதன் இயங்குமுறை பட்டறிவுகளுடன் புதிய பரிமாணங்களை எடுக்க வேண்டியது அவசியம்.

ஏகாதிபத்திய யுகத்தில் தொழிலாளர் வர்க்கமே பெரும்பான்மையான தும் முன்னேறியதுமாகும் என்பதால் தொழிலாளர் வர்க்க மேலாதிக் கத்தினூடாக மீண்டும் சோஷலிஸம் உலகெங்கும் புதிய சூழ்நிலை களுக்கும் தேவைகளுக்குமேற்ப கட்டப்பட வேண்டும். தொழிலாளர் வர்க்கத் தலைமையிலான ஆளுகையும் புரட்சிகளுமே பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வாவதுடன் மனிதனை மனிதன் சுரண்டாத சமூகத்தைப் படைக்க முடியும்.

எனவே அதி தொழில்நுட்ப வளர்ச்சியும் அதனோடிணைந்த ஏகாதி பத்தியப் பூகோளமயமாதலும் தொழிலாளர் வர்க்கத்தினதும் விவசாயி களினதும் மற்றும் அனைத்துச் சுரண்டப்படும் உழைக்கும் மக்க ளிடையேயும் பலவிதமான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. அவற்றை ஆழ்ந்து கவனிக்கும் போதும் உழைப்பிற்கும் மூலதனத்திற்குமிடையி லான அடிப்படை முரண்பாடு, முதலாளித்துவத்திற்கும் சோஷலிஸத் திற்குமிடையிலான அடிப்படை முரண்பாடு இன்னும் இருப்பதும் அதனைத் தீர்க்க வல்ல வலிதான ஆயுதமாக மாக்சிசமே இருப்பதும் தெளிவாகும்.

மாக்சிசத்தை உயர்த்திப் பிடித்து வர்க்கப் புரட்சியை முன்னெடுக் கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இன்னும் வரலாற் றுக் கடமை இருக்கவே செய்கிறது.

*****

www.tamilarangam.net

**புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிக் கட்சியின்**
**5வது அனைத்து இலங்கை மாநாட்டு ஆவணங்கள் - 2**

# சர்வதேச நிலைமை

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைவதற்கு முன்பே, 1941ஆம் ஆண்டு அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், பிரித்தானிய பிரதமர் சேர்ச்சிலும் கையெழுத்திட்ட அட்லாண்டிக் பட்டயத்தின்படி ஏகாதிபத் திய நாடுகள் நேரடியாகக் கொலனிகளை வைத்திருக்காமல் கொலனி களைச் சுரண்டிக் கொள்வதற்கான ஏகாதிபத்திய சமத்துவ நிலையை ஏற்படுத்தும் புதிய உலக ஒழுங்கு ஏற்பட்டது. 1944ஆம் ஆண்டு 44 நாடுகளின் நிதித் துறைப் பிரதிநிதிகள் அமெரிக்காவின் நியூ ஹாம்ப் ஷயரிலுள்ள பிரெட்டன் வூட்ஸ் நகரில் சந்தித்துச் சர்வதேச நாணய நிதியத்தை அமைப்பதற்கான வரைவை நிறைவு செய்தனர். இங்கு நிதி மூலதனச் சந்தையை பாதுகாக்கவும் நாடுகளுக்கு கடன் வழங்க வும் உதவிகளை வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றின் படி நாடுகள் மீது நிபந்தனைகளை விதிக்கவும், நாடுகளிலிருந்து வாக்குறுதிகளைப் பெற்றுக் கொள்ளவும் பலம்பொருந்திய அமைப் பாகச் சர்வதேச நாணய நிதியம் மாறியது. அதனது பிடி ஏகாதிபத்திய நாடுகளிடமே இருந்தது. அதுவே வளர்முக நாடுகளை மறைமுகக் கொலனிகளாக்கும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கும் நவ கொலனித்துவ உலக ஒழுங்கு நிறுவனமாகியது. அதன் பின்னர் அமைக்கப்பட்ட உலக வங்கி உட்பட ஐ.நா. சபை, ஐ.நா. முகவர் நிறுவனங்கள் அனைத்தும் ஏறக்குறைய நவகொலனித்துவ நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கலாயின. சோவியத் யூனியனதும் பின்னர் சீனா போன்ற சோஷலிஸ நாடுகள் உள்ளடங்கிய சோஷலிஸ முகாமினதும் இருப்பும் வளர்ச்சியும், ஐ.நா. பிரெட்டன் வூட்ஸ் ஒப்பந்தத்தை சர்வ தேச ஒழுங்காக ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் நவகொலனித்துவ நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான போராட்டங்கள் பலமாக இருந்தன.

சோஷலிஸ மூன்றாம் அகிலத்திற்குப் பிறகு வலிமையுடன் எழுந்த சோஷலிஸ முகாமில் ஏற்பட்ட முரண்பாடுகள் நவகொலனித்துவ நிகழ்ச்சி நிரலை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தினாலும் 1960களில் ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் நடந்த தேசிய விடுதலைப் போராட்டங்களினாலும் தேசிய அரசுகளின் தேசியப் பொருளாதார முன்னெடுப்புக்களினாலும் ஏகாதிபத்திய நிகழ்ச்சிநிரல் சவால்களை எதிர்நோக்கியது. இந்நிலையி லேயே ஏகாதிபத்தியப் பூகோளமயமாதல் அறிமுகமாகிறது.

அந்த நிகழ்ச்சி நிரலை அதிகாரபூர்வமாக முன்னெடுக்க 1995இல் உலக வர்த்தக நிறுவனம் அமைக்கப்பட்டது. அதற்கமையச் சர்வதேச நிறுவனங்களும், ஏகாதிபத்திய நாடுகளும் முன்னெடுத்த நவகொலனித் துவ நிகழ்ச்சிநிரலைப் பெருமளவில் பல்தேசியக் கம்பனிகள் முன்னெ டுக்கலாயின. 2000ஆம் ஆண்டு ஐ.நா.வின் புதிய மிலேனிய அறிக்கை யில் பூகோளமயமாதல் புதிய உலக ஒழுங்காக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. அதன்படி, மூலதனம் பூகோளமயமாக்கப்பட்டுள்ளது. அதன் விரிவாக்கமாக ஏகாதிபத்தியத் தகவல் வலைப் பின்னல், பாதுகாப்பு வலைப்பின்னல் போன்றன நிலைநிறுத்தப்பட்டுள்ளன. எனினும், தற் போது நிதி மூலதனச் சந்தைக்குப் பலவித பின்னிடைவுகளும் சிக்கல் களும் ஏற்பட்டுள்ளன. அமெரிக்காவிலும் ஏனைய முதலாளித்துவ நாடு களிலும் பல நிதிக் கம்பனிகள் கவிழ்ந்துள்ளன. ஏகாதிபத்திய நாடு களில் தொழிலாளர் வர்க்கத்தின் அரச எதிர்ப்புப் போராட்டங்கள் முன்பொருபோதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளன.

மத்திய கிழக்குப் பிரச்சினைகள் மேலும் உக்கிரமடைந்து வருகின் றன. கிழக்கு ஐரோப்பியாவில் நாடுகள் அமெரிக்கா, மேற்கு ஏகாதிபத் தியச் சக்திகளினால் துண்டாடப்பட்டுள்ளன. பல நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியப் படைத்தளங்கள் இருக்கின்றன. ஈராக்கிலும் ஆப்கானிஸ் தானிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் யுத்த ஆக்கிரமிப்பை மேற் கொண்டு அங்கு பொம்மை அரசாங்கங்களை அமைத்துள்ளது. அங்கு உள்நாட்டு ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்திய சக்திகளின் பொம்மைக ளாக்கப்பட்டுள்ளன. இவை நவகொலனித்துவ தாக்குதல்களின் விளை வுகளாகும். அதைவிட மேலும் பல நவகொலனித்துவ விளைவுகளை யும் அவதானிக்க முடியும். அங்கு மக்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இருக்கின்றனர்.

பல சவால்களுக்கு மத்தியிலும் சோஷலிஸ கட்டுமானங்களை முன்னெடுத்துவரும் வட கொரியாவும், கியூபாவும் ஏகாதிபத்திய எதிர்ப் பையும் ஏகாதிபத்திய பூகோளமயமாதலுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலை யும் முன்னெடுத்து வருகின்றன. இது அவற்றின் தேசிய ரீதியான இருப்பை மையமாகக் கொண்டாலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோஷ லிஸக் கட்டுமானங்களை அடிப்படையாகக் கொண்டதாக முன்னெடுக் கப்படுகிறது. அவற்றில் நவகொலனித்துவப் பாதிப்புக் குறைவெனினும் அந் நாடுகளும் பல்தேசிய சர்வதேச நாணய நிதியமும், உலகவங்கி, உலக வர்த்தக நிறுவனம் போன்ற நவகொலனித்துவ நிறுவனங்க ளுடனும், ஏகாதிபத்திய சக்திகளுடனும் சமரசம் செய்தும் வருகின் றன. அந் நாடுகளினுள்ளும் பல்தேசிய கம்பனிகள் இயங்குவதற்கு அனுமதியளிக்க நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. வெனிசுவேலா, பொலி வியா போன்ற நாடுகளில் சோஷலிஸக் கட்டுமானம் கியூபா, வட கொரியா போன்று இல்லாவிட்டாலும் ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்

படையாகக் கொண்ட முற்போக்குத் தேசியம் முன்னெடுக்கப்படுவதால் நவகொலனித்துவப் பிடிக்குள் அவை முற்றாக மூழ்காமல் இருக் கின்றன.

சீனா ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் பங்காளியாக இருப்பதுடன் அது முதலாளித்துவமயமாகி விட்டதாலும் ஏகாதிபத்திய நாடுகளுடனும் அதன் இணை நாடுகளுடனான போட்டியை முன்னெடுப்பதாலும் — ஏகாதிபத்திய அணியைச் சார்ந்திருக்காவிட்டாலும் — தன் மேலாதிக் கத்தை நிலைநாட்டும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது. இதன் வளர்ச்சிப் போக்கு, இருக்கின்ற ஏகாதிபத்தியத்தின் வகைமாதிரி களில் ஒன்றாக இல்லாவிட்டாலும், அதனை ஏகாதிபத்தியத்தின் நிலைக்கு இட்டுச் செல்லலாம். வியட்நாம் சீனாவின் நிகழ்ச்சிநிர லுக்கு ஏற்ப அதன் அணியாகச் செயற்பட்டு வருகின்றது.

இந்தியா மீது நவகொலனித்துவத் தாக்குதல்கள் உள்ளபோதும், பெருமுதலாளி வர்க்கமும் அதிகாரத்துவ முதலாளித்துவ வர்க்கமும் அதன் ஆளும் வர்க்கங்களாக இருப்பதால் அது ஏகாதிபத்தியப் பூகோளமயமாதலின் பங்காளியாகவும் ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக் குரிய பங்காளியாகவும் இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கும் அதே வேளை, நேபாளம், இலங்கை, பங்ளாதேஷ், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகள் மீது இந்தியா அதன் ஏகாதி பத்திய அக்கறைகளை நேரடியாகவும், ஆபிரிக்க நாடுகள் மீது மறை முகமாகவும் நிலைநாட்டிவருகிறது. பிறேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் பங்காளிகளாக இருந்து வருகின்றன. ஏகாதிபத்தியத்தின் பங்காளியாகவும் யுத்த பூகோளமய மாதலின் பங்காளியாகவும் மத்திய கிழக்கில் இஸ்ரேல் இருக்கிறது.

இவற்றைப் போன்ற நாடுகளைத் தவிர ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெருமுதலாளி வர்க்கமும், அதிகாரத்துவ முத லாளித்துவ வர்க்கமும் ஆதிக்கம் செலுத்துவனவாகவே இருப்பினும் அவை ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்தவனவாகவும் அவற்றின் வாடிக்கை அரசுகளாகவும் இருப்பதுடன் புதுவகைத் தரகு முதலாளித் துவ வர்க்கத்திற்கு உதாரணமாக இருப்பதுடன் நவகொலனிகளாகவும் இருக்கின்றன.

நிதி மூலதன ஆதிக்கத்தையும் இராணுவ வல்லமையையும் கொண் டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தினை மையமாகக் கொண்ட ஏகாதி பத்திய முறைமை பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, போலந்து, இத்தாலி போன்ற ஐரோப்பிய மேலாதிக்க சக்திகளையும் ரஷ்யாவையும் ஜப்பா னையும் கொண்டியங்குகிறது. இவை நவதாராளவாத பொருளாதார முறைமையைக் கொண்ட நவகொலனித்துவத்தைப் பூகோளமயமாதல் நிகழ்ச்சிநிரலினூடாக முன்னெடுத்து வருகின்றன. தமக்குத் தேவை

யான போது மத அடிப்படைவாதம், தேசியவாதம், இனவாதம் போன்ற வற்றைத் தூண்டிப் பாதுகாத்துச் செயற்படுகிறது.

முன்பு இருந்தது போன்று முதலாளித்துவ முகாம், சோஷலிஸ முகாம், அணிசேராமை என்பன இன்று இல்லை. தற்போது நாடுகளின் அணிசேர்க்கை தெளிவற்றதாகத் தோன்றினாலும் சமகால உலகத்தில்:

1. *ஏகாதிபத்திய நாடுகளும் அவற்றின் அணியின் பங்காளி நாடுகளும் ஏகபோக முதலாளித்துவ குழுக்களும் (பல்தேசியக் கம்பனிகள்),*
2. *அடக்கப்படும் நாடுகளும் தேசங்களும் மக்களும்,*
3. *சோஷலிஸக் கட்டுமானத்தில் இருக்கும் நாடுகளும் சோஷலிஸச் சக்திகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளும் சக்திகளும்,*
4. *சிறிய/வலிமைகுறைந்த நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் மக்களும்*

என வகைப்படுத்தலாம்.

சர்வதேசரீதியான முரண்பாடுகளை

1. *ஏகாதிபத்தியச் சக்திகளுக்கிடையேயான, ஏகபோக முதலாளித்துவ சக்திகளுக்கிடையிலான, ஏகாதிபத்திய சக்திகளுக்கும் ஏகபோக முதலாளித்துவ சக்திகளுக்குமிடையேயான முரண்பாடுகள்,*
2. *ஏகாதிபத்தியத்திற்கும் அடக்கப்படும் தேசங்களுக்கும் மக்களுக்கு மிடையிலான முரண்பாடுகள்,*
3. *சோஷலிஸக் கட்டுமானத்தில் இருக்கும் நாடுகள், சோஷலிஸச் சக்திகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகள், அவற்றின் மக்கள் ஆகி யோருக்கும் ஏகாதிபத்திய நாடுகள், சக்திகள், ஏகபோக முதலா ளித்துவ சக்திகள், நவகொலனித்துவ நிறுவனங்கள் ஆகியவற் றுக்கும் இடையிலான முரண்பாடுகள்,*
4. *சோஷலிஸக் கட்டுமானத்தில் இருக்கும் நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையிலான முரண்பாடுகள்,*
5. *பெரிய (வலிமையான) நாடுகளுக்கும் சிறிய (வலிமை குறைந்த) நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள,*
6. *உழைப்புக்கும் மூலதனத்துக்குமிடையிலான முரண்பாடுகள்*

என வகைப்படுத்தலாம்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஏகாதிபத்தியப் பூகோளமயமாதல் எதிர்ப்பு என்பதில் உலக நாடுகளின் ஆளும் வர்க்கங்களாக, ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களாக இருக்கும் இன, மத, பிராந்திய மேலா திக்க சக்திகளும், நிலப்பிரபுத்துவ சக்திகளும் அவற்றின் இருப்பிற் காக அணிதிரண்டுள்ளன என்பதை அவதானிக்க முடியும். பிராந்திய

அணிச்சேர்க்கைகளான ஆசியான், சார்க், ஜி-15 போன்றவற்றில் ஏகாதிபத்தியச் சார்புச் சக்திகளும் இருக்கின்றன. அவற்றுக்கும் ஜி-7 நாடுகளுக்குமிடையே முரண்பாடுகள் இருந்தாலும், அவை நடை முறைச் சாத்தியமான அணிசேர்க்கைகளல்ல.

ஏகாதிபத்திய நவகொலனித்துவத்தின் தாக்குதலுக்குத் தொடர்ச்சி யாக இலக்காகி வந்தாலும், நவகொலனித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கத்தினர், உள்நாட்டு மக்களை அடக்கி ஆளவும் ஜனநாயக, சுயநிர்ணய உரிமை, தொழிலாளர்கள், சமூக மாற்றப் போராட்டங் களை ஒடுக்குவதற்காகவும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக் கவும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல்களை அரவணைத்துக் கொள்வ துண்டு. உதாரணமாகப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர், நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கை, பல்தேசிய கம்பனிகளை அனுமதிப்பது, சர்வதேச நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு அடி பணிந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வது, சர்வதேச, தேசியத் தொண்டு நிறுவனங்களை இயங்க அனுமதிப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தச் சூழ்நிலையில், நவகொலனித்துவ நாடுகளிலுள்ள ஆளும் வர்க்கத்தினர், நாடுகளின் சுதந்திரம் இறைமை, ஒருமைப்பாடு, சுயாதி பத்தியம், முற்போக்கு தேசியம் பற்றியெல்லாம் பற்றிப் பேசுவதற்கு அருகதையற்றவர்களாவர். அதே போன்று, அடக்கப்படும் தேசங்களின் தேசிய இனங்களின் ஆதிக்கச் சக்திகள், நவகொலனித்துவத்தையும் ஏகாதிபத்திய பூகோளமயமாதலையும் ஏற்றுக் கொண்ட நிலையில், முற்போக்குத் தேசியத்தை முன்னெடுக்கத் தகுதியற்றவையாகின்றன.

மூன்றாம் அகிலத்திற்குப் பிறகு, 1960களில் எழுந்த திரிபுவாதத் திற்கு எதிரான நிலைப்பாட்டின் காரணமாக சோஷலிஸ சீனாவின் பக்கம் பெரும் எண்ணிக்கையான கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்ந்து நின்ற போதும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, புதிய கம்யூனிஸ்ட் சர்வ தேசியத்தைக் கட்டத் தவறியது. ஏனைய கம்யூனிஸ்ட் கட்சிகள் சில புதிய சர்வதேசியத்தைக் கட்டுவதில் கவனஞ் செலுத்திய போதும், பொது உடன்பாடு எட்டப்படவில்லை. (ட்ரொட்ஸ்கியக் கட்சிகள் 4வது அகிலம் பற்றிப் பேசினாலும் 4வது அகிலம் என்று அவை பல குழுக் களாக இயங்குகின்றன என்பது கவனிக்கத்தக்கது).

திரிபுவாதத்தை — அதாவது அமைதியான முறையில் சமூகமாற்றம்/ புரட்சி என்பதை — ஏற்றுக் கொண்டவர்களுக்கு சர்வ தேசியத்தில் அக்கறை இல்லை ஆட்சி செய்த பிரபலமான கம்யூனிஸ்ட் கட்சிக ளுடன் அவர்கள் தொடர்புகளை வளர்த்துக் கொண்டாலும் அவற்றுக் குப் புரட்சிகர சர்வதேசியம் பற்றி அக்கறை இல்லை.

www.tamilarangam.net

மாஓவாதிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் கட்சிகளில் ஒரு சில கட்சிகளைத் தவிர அனேகமானவை மாஓவாதிகள் என்பதை அறிவித்துக் கொண்டால் மட்டுமே ஏனைய கட்சிகளுடன் தொடர்பை வைத்துக்கொள்ளும்/உறவை வளர்த்துக் கொள்ளும் குறுகிய பார் வையைக் கொண்டு சில சர்வதேச, பிராந்திய அமைப்புகளைக் கட்டி யுள்ளன. ஆனால் பலமான சர்வதேசியத்தைக் கட்ட முடியவில்லை.

எந்தவொரு கட்சியும் எமது கட்சியுடன் தொடர்பை வைத்துக் கொள்ளவோ உறவை வளர்த்துக் கொள்ளவோ விரும்பினால், அது தன்னை “மாஓவாதி” என்று அழைத்துக் கொள்வதற்காக, அதை ஏற்க நாம் பின் நிற்கவில்லை. நாம் மாக்சிசத்தின் வளர்ச்சியை மாக்சிசம்-லெனினிசம்-மாஓ சேதுங் சிந்தனையும், பிற வளர்ச்சிகளும் என்று குறிப்பிடுவதுடன் எமது வழிகாட்டியாக அவற்றைக் கொள்கி றோம். ஐரோப்பிய மையவாதத்தைக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் மாஓ வின் பங்களிப்பை நிராகரிப்பதை நாம் ஏற்கவில்லை. மாஓவின் பங்க ளிப்புகளிற் சில சீனாவின் குறிப்பிட்ட நிலைமைகளும் சில பொது வாகப் பின்தங்கிய நாடுகளுக்கும் ஏற்றன. திரிபுவாதத்திற்கு எதிரான நிலைப்பாடு, முரண்பாடுகள் பற்றி, புதிய-ஜனநாயகப் புரட்சி, மக்கள் யுத்தம் போன்றவை சர்வ வியாபகமான ஏற்புடமையுடன் இருக்கலாம். ஆனால் இது ஏகாதிபத்திய யுகமும் அதற்குப் பதிலான லெனினிச யுகமும் என்பதாலும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் பரந்த ஐக்கியம் அவசியம் என்பதாலும் நாம் மாஓவாதம் என்றழைப்பதைத் தவிர்த்து மாஓ சிந்தனை என்றே அழைக்கிறோம். மூன்றுலகக் கோட்பாட்டை எமது கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரில் இயங்கியபோது ஏற்றுக் கொண்டுள்ளது. தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான கட்சியிலிருந்து எமது கட்சியை அமைக்கத் தலைமைத் தோழர்களாக வந்தவர்கள் ஒதுக்கப்பட்ட மைக்கும் எமது கட்சியை அமைப்பதற்கும் இருந்த பல காரணங் களில் மூன்றுலகக் கோட்பாடு பற்றிய முரண்பாடும் ஒரு காரண மாகும். அக் கோட்பாட்டினை விமர்சன ரீதியாக நாம் தற்போது பார்க்கிறோம். மாஓவின் இறப்பிற்குப் பின் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிஸத்திற்கும் இடையிலான முரண்பாட் டைப் பிரதான முரண்பாடுகளிலிருந்து நீக்கியமை பற்றியும் நாம் முரண்பட்டோம். பின்னர் டெங் ஷியாஓ பிங்கின் சீர்திருத்தங்கள் உட்படச் சீனாவை முதலாளித்துவத்திற்கு மாற்றும் பல திட்டங் களுடன் முரண்பட்டோம். ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அதன் குறிப்பான உள்நாட்டுச் சூழ்நிலைகளுக்கு ஏற்பக் கொள்கைகளையும் திட்டங் களையும் வகுத்துக் கொள்ளலாம் என்ற சுதந்திரம் திரிபுவாதத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடமளிப்பதாகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சோவியத் யூனியனின் குருஷ்சேவ்வின் தலைமையில் திரிபுவாதத் திற்கு மாறிவிட்டதை குருஷ்சேவின் காலத்திலேயே கண்டித்ததுடன் சீனாவில் மாஓ உயிருடன் இருந்தபோதே லின் பியாஓ குழுவினரால் இழைக்கப்பட்ட தவறுகளையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

நாம் தற்போது ஏகாதிபத்திய பூகோளமயமாதல் எதிர்ப்பு / ஏகாதி பத்திய எதிர்ப்பு என்ற விரிந்த பரந்த தளத்தில் உலக நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களுடனும் ஜனநாயக, இடதுசாரி, முற் போக்கு, கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும் தொடர்புகளை வலுப்படுத்தி வருகிறோம். பலமான தனியொரு சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமெதுவும் இல்லாது பல முன்னெடுப்புகள் இருக்கும் நிலையில், நாம் எமது நிலைப்பாட்டிற்கு நேர்மையெனக் கருதும் ஒன்றிற்கு மேற் பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புக்களுடன் சேர்ந்து இயங்கும் விருப்பம் கொண்டுள்ளோம். நாம் தற்போது உத்தியோகபூர்வமாகச் சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகளின் கூட்டுக் குழு எனும் அமைப்பில் அங்கம் வகிப்பதுடன் அதன் செயலகத்திலும் அங்கம் வகிக்கிறோம். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். உள்நாட்டில் கியூப தேசிய தினமான ஜனவரி முதலாம் திகதியை வருடாந்தம் ஏகாதி பத்திய எதிர்ப்பு தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பதாகையின் கீழ் பிற்போக்குத் தேசிய வாத நிலப்பிரபுத்துவ, மதவெறி கொண்ட பல்வேறு சக்திகளுடனான உறவோ தொடர்போ பொது உடன்பாடோ நீடிக்க முடியாது.

தற்போது, பல சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்புகள் இயங்குகின்ற இன்றைய சூழ்நிலையில், நாம் ஒன்றிற்கு மேற்பட்ட சர்வதேச அமைப்புக்களுடன் இயங்க வேண்டுமெனினோ முடியுமாயினோ அவ்வாறு இயங்கும் தெரிவையும் உரிமையையும் சுதந்திரத்தையும் கொண்டுள்ளோம். ஒரு நாட்டிலுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட கட்சி களுடன் தொடர்பை வைத்திருப்பதும் தவிர்க்க முடியாது. தற்போது நாம் எந்தச் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் அங்கம் வகிக்க வில்லை. ஆனாற் பல சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்புக்களுடன் தொடர்பைக் கொண்டுள்ளோம்.

இந்தியா, பங்ளாதேஷ், நேபாளம், அமெரிக்கா, பிலிப்பீன்ஸ் ஆகிய நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தொடர்பையும், உறவையும் கொண்டுள்ளோம். அதைத் தவிர, ஏனைய உலக நாடுகளின் கம்யூ னிஸ்ட் கட்சிகளுடனும் தொடர்பைக் கொண்டுள்ளோம். இந்த உறவு களை மேலும் வளர்க்க முயல்கின்றோம். எம்மைப் பொறுத்த வரை, முரண்பாடுகள் குறைவாகவும் உடன்பாடுகள் கூடுதலாகவும் உள்ளன வான உலக நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தொடர்பையும்

உறவையும் வளர்க்க விரும்புகிறோம். அந்த வகையில் எமக்குப் பல கட்சிகளுடன் தொடர்பு இருக்கிறது. அதனை உறவாக வளர்க்க முயல்கின்றோம். முரண்பாடுகளைச், சினேகபூர்வமாக, “ஐக்கியமும் போராட்டமும்” என்ற அடிப்படையில் கருத்துப் பரிமாறலின் மூலம் தீர்க்க முடியும் என நம்புகிறோம். உலக நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான தொடர்பையும் உறவையும் வலுப்படுத்தும் நோக்கில் “சகோதரக் கட்சிகளுடனான முரண்பாடுகள் பற்றி” என்ற தலைப்பில் எமது நியூ டெமோக்ரசி (New Democracy) பெப்ரவரி 2010, 36ஆம் இதழில் சில குறிப்புகள் வெளியாகியுள்ளன. அவற்றை அடிப்படை யாகக் கொண்டு உலக நாடுகளின் கட்சிகளுடன் கலந்துரையாடித் தீர்வு காண விரும்புகிறோம்.

விஞ்ஞான ரீதியாக இதுவரை முடிவு காணப்படாததும் இன்றைய சூழ்நிலையில் மாறக் கூடியதுமான உண்மைகள் பற்றிப் பல அபிப் பிராயங்களையும் கருத்துக்களையும் கேட்டுக் கலந்துரையாடி விவா தித்து முடிவு செய்ய நாம் திறந்த மனத்துடன் செயற்படுகிறோம். குறித்த சூழ்நிலையில் குறித்த முடிவை எடுப்பது மாக்சிசத்தின் அடிப் படை என்பதை நாம் மறக்கவில்லை. அதற்கான வாய்ப்பைப் பேணிக் கொண்டு நாம் பிற கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இருதரப்பு உறவை வளர்க்கவும், அதனைப் பலதரப்பு உறவாக விரித்து, பிராந்தியம், கண்டம், சர்வதேசம் என விரிவடையும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக் கத்தைக் கட்டவும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தை வளர்க்கவும், கம்யூனிஸ்ட்டுகள் என்ற ரீதியில் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

மாக்சிச லெனினிசவாதிகள் முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத் தையும் எதிர்ப்பதுடன், திரிபுவாதம், சந்தர்ப்பவாதம், அராஜகம், திகில் வாதம் போன்றவற்றுடன் சமரசம் செய்வதுமில்லை. தென்னாசியப் பிராந்தியத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பலமடைவதனூடும் ஐக்கியப் படுவதனூடும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்ட வழி ஏற்படும் என நாம் நம்புகிறோம்.

ஏகாதிபத்தியம் சர்வதேச ரீதியாகவும், பிராந்தியரீதியாகவும் உள் நாட்டிலும் என்.ஜீ.ஓக்கள் போன்ற பல அமைப்புகளையும் அமைத்துச் செயற்படும் போது ஏகாதிபத்திய எதிர்ப்பிற்காக அதைவிடப் பலமான அமைப்புகள் அவசியம். அதே போன்று கம்யூனிஸ்ட் அமைப்புகளும் அவசியம். அதற்கான குறிப்பானதும் பொதுவானதுமான கடமைகளை யும், பொறுப்புக்களையும் ஏற்றுச் செயற்பட எமது கட்சி திடசங்கற்பம் கொண்டுள்ளது.

ஒரு நாட்டிற்குள் நடக்கும் போராட்டமோ புரட்சியோ, சொற்களி லன்றி உண்மையாகவே, சர்வதேசப் புரட்சியின் பகுதியாக இருக்க வும் சர்வதேசப் போராட்டங்களும் தேசியப் புரட்சிகள், தேசியப்

www.tamilarangam.net

போராட்டங்கள் புரட்சிகள் என்பனவும் நோக்கிலும் போக்கிலும் பொது வானவையாக இருக்கவும், உண்மையான சர்வதேச உடன்பாட்டை எட்டக் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே கலந்துரையாடல்கள் தொடக்கப் பட வேண்டியதுடன் பொது உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளும் தீர்மானங்களும் எட்டப்பட வேண்டும்.

1. *புதிய நிலைமைகளுக்கு ஏற்ப, மாக்சிசத்தை அரசியல் தத்துவ மாகவோ, பொருளாதாரத் தத்துவமாகவோ மட்டுமன்றி, அடையா ளந் தெடர்பான அரசியல்-சமூக-பண்பாட்டு விடயங்களினதும் சூழல் தொடர்பானதும் மனித வாழ்வினதும் பௌதிக விஞ்ஞா னத்தினதும் சமூக விஞ்ஞானத்தினதும் பண்பாட்டினதும் பன்முகப் பட்ட தத்துவமாகவும் நடை முறையாகவும் ஆழமாக்கி விரிவாக் கிப் பலப்படுத்த வேண்டும். அதற்கான ஆய்வுகள் சர்வதேச மையத்தினூடாகச் செய்யப்பட வேண்டும். குறிப்பாகச் சோவியத் யூனியன், சீனா போன்ற நாடுகள் மீள முதலாளிமயமாக்கப் பட்டதற்குச் சரியான காரணங்களைக் கண்டறிந்து தொகுப்பது அவசியம். சோஷலிஸ ஆட்சியின் கீழும் பிற்போக்கு வர்க்கத்தினர் சோஷலிஸத்திற்கு எதிராகப் பல விதத்திலும் செயற்படுவர் என்பதை லெனின் எச்சரித்திருந்தார். சோஷலிஸத்திற்குக் கீழும் வர்க்கப் போராட்டம் தொடர வேண்டும் என மாஓ கூறியதும் நினைவிற் கொள்ளத் தக்கது.*
2. *பல்வேறு நாடுகளினுடைய கம்யூனிஸ்ட் கட்சிகள் பிராந்திய, சர்வ தேச ரீதியாக விமர்சனம்—சுயவிமர்சனம், கலந்துரையாடல்கள், விவாதங்கள், கருத்துப் பரிமாறல்கள் போன்றவற்றினூடாகப் பொது உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.*
3. *கம்யூனிஸ்ட் கட்சிகளின் போராட்டங்கட்கும் புரட்சிகட்கும் சர்வ தேச ஒத்துழைப்பை நிலைநாட்ட ஒரு சர்வதேச மையம் ஏற்படுத் தப்பட வேண்டும். அதனூடாகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் போராட் டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வலுப்படுத்தப்படலாம்.*
4. *ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்திய பூகோளமயமாதலுக்கும் எதி ராகவும் நாடுகளுக்குள்ளே இருக்கும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கு எதிராகவுமான போராட்டங்களை, சர்வதேச கம்யூ னிஸ்ட் இயக்கத்தினூடாகவும் அதன் பன்முகப்பட்ட வலைப் பின்னல்களுக்கு ஊடாகவும் வலுப்படுத்தி, வெற்றிபெறச் செய்ய வேண்டும். அதற்கான சர்வதேச மையம் உருவாக்கப்பட வேண்டும்.*
5. *ஆட்சி செய்யும் கம்யூனிஸ்ட் கட்சிகள் நாட்டு அரசுகளுக்கிடை யேயான உறவை விட மக்களுக்கிடையேயானதும் கட்சிகளுக் கிடையேயானதுமான உறவை முக்கியப்படுத்தி வலுப்படுத்த வேண்டும்.*

www.tamilarangam.net

6. *சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்க பிரசார தகவல் தொடர்பு வலைப் பின்னல் ஏற்படுத்தப்பட வேண்டும்.*
7. *ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், இன, மத அடிப்படைவாதம் உட்பட சகல மனிதகுல விரோத முறைமைகளுக்கும் எதிரான போராட்டங்களுக்கும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.*
8. *மேற்கூறப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கியதான புதிய கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.*

***மாக்சிசம், லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை வாழ்க!***

***பாட்டாளி வர்க்க கம்யூனிஸ்ட் சர்வதேசியம் வளர்க!***

***உலகத் தொழிலாளர்களினதும், உழைக்கும் மக்களினதும் போராட்டங்கள் வெல்க!***

***அடக்கப்பட்ட நாடுகள், தேசங்கள், மக்களின் போராட்டங்கள் வெல்க!***

***கம்யூனிஸ்ட் கட்சிகளின் இருபக்க, பலபக்க, சர்வதேச உறவுகள் வலுப்பெறுக!***

***ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் மேலாதிக்கம் ஒழிக!***

*****

**புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிக் கட்சியின்
5வது அனைத்து இலங்கை மாநாட்டு ஆவணங்கள் - 3**

# தேசிய நிலைமை

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரில் 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி தொடங்கப்பட்ட எமது கட்சி, தனது முதலாவது மாநாட்டை 1984இல் நடத்தியது. இரண்டாவது மாநாட்டை 1991இல் நடத்திப் புதிய-ஜனநாயகக் கட்சி என்று பெயரை மாற்றிக் கொண்டது. 1997இல் மூன்றாவது மாநாட்டையும் 2002இல் நான்காவது மாநாட்டையும் நடத்தியது. 2010ஆம் ஆண்டில் ஐந்தாவது மாநாட்டை நடத்துகிறது.

4வது மாநாடு நடைபெற்றபோது, தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் ஆயுத நடவடிக்கைகளில் இறுதியாக ஆயுத எதிர்ப்பு நடவடிக் கயைத் தனியாக முன்னெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்திற்கும் நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைத்து நடத்திய பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றது. சமாதான முன்னெடுப் புக்கள் இழுத்தடிக்கப்பட்டன. 2005ஆம் ஆண்டு முடிவில், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பிறகான சூழ்நிலையில், சமாதான நடவடிக் கைகள் நிறுத்தப்பட்டுப் போர் தொடங்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக எடுக்கப்படுவதாக தமிழ்ப் பிரதேசங் களில் அரசாங்கம் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகள் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் தலைவர் வே.பிரபாகரன் உட்பட அவ்வியக்கத்தின் பல முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டதுடன் முடிவிற்கு வந்தது. இந்த இறுதி நடவடிக்கைகளினால் 40 ஆயிரம் பேர் வரை கொல்லப் பட்டதுடன் மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் திறந்தவெளி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டனர். அவர்களில் அரைவாசிப் பேருக்கு மேல் படுகாயமடைந்தவர்களாவர். 15 ஆயிரம் பேர்வரை காணாமற் போனதாகக் கூறப்படுகிறது. அவ்வேளை 12 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிற் பலர் பல மாதங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டாலும் இன்னும் பெரும் பகுதி யினர் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். மீள் குடியேற்றம் செய்யப் படுவதாகக் காட்டப்பட்ட போதும் இன்னும் பெரும் எண்ணிக்கை

யானோர் முகாம்களில் இருக்கின்றனர். குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ளோர் அகதிகள் போன்றே இருக்கின்றனர். ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் இருந்தவற்றையும் இழந்தவர்களாகவே இருக்கின்றனர். அரசின் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தாலும் எமது கட்சி கூறுவது போன்று தேசிய இனப் பிரச்சினை இலங்கையின் பிரதான பிரச்சினையாக இருந்து வருகிறது. அதற்குப் பேச்சுவார்த்தை யின் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

சமாதான காலம் என்று சொல்லப்பட்ட காலத்திலும், யுத்த காலத் திலும், யுத்தம் முடிவடைந்த பிறகும் இலங்கை மீதான அந்நியச் சக்தி களின் பிடி இறுகியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என்ப வற்றினதும் இந்தியாவினதும் மிரட்டல்கள் அதிகரித்து வந்துள்ளன. அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளில் அரசிற்குப் பல விதங் களில் உதவியுள்ளன.

ஒப்பீட்டளவில் 1970களில் இந்தியாவை விடப் பொருளாதாரரீதியாகப் பலமாகவும், தங்கியிருக்கும் தன்மை குறைவாகவும் கொண்டிருந்த இலங்கையில் பிரிவினைவாத ஆயுதக் கிளர்ச்சியை ஏற்படுத்த, இந்தியா தமிழ் குழுக்களுக்குப் பயிற்றுவித்து, இலங்கையில் தாக்கு தல்களை மேற்கொள்ளும் திட்டங்களை அவற்றுக்கு வழங்கியும் வந்தது. 1987ஆம் ஆண்டு இலங்கை, இந்திய சமாதான உடன்படிக் கையை ஏற்படுத்திக் கொண்டு மேற்கு, அமெரிக்க ஏகாதிபத்திய சார்பாக இருந்த இலங்கையை இந்தியா தன் காலடிகளுக்குக் கொண்டு சென்றது. தமிழ் ஆயுத அமைப்புகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவின் தந்திரோபாயங்களுக்கு அடிபணியாது தொடர்ந்தும் தன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது. 1990களில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் அமெரிக்க ஏகாதிபத்தி யத்தினதும் ஐரோப்பிய நாடுகளினதும் தலையீடு அதிகரித்தது. அதன் விளைவாக 2000ஆம் ஆண்டில் நோர்வேயின் அனுசரணையுடன் சமா தான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கமும் அரசாங்கமும் அதிற் பங்கெடுத்தாலும் அவை உள் நோக்கங்களுடன் மறைமுக நிகழ்ச்சி நிரல்களுடனும் செயற்பட்டன. அமைதி முயற்சிகளைக் குழப்புவதற்கு ஆரம்பமுதலே இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்து வந்தது. அமைதி முயற்சிகளுக்கு எதிராக இருந்த நிலப்பிரபுத்துவ, சிங்கள பழமைவாத அடிப்படைகளைக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியான பிறகு இந்தியாவுக்கு மேலும் வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கையில் தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்து, 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையின்படி ஏற்படுத்தப்பட்டதும் இலங்கைத் தமிழ் மக்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபி

லாட்சைகளைக் குறைந்த பட்சமாயினும் உறுதி செய்யாததுமான மாகாண சபைகளைத் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக நடை முறைப்படுத்த இந்தியா எண்ணம் கொண்டிருந்தது. மாகாண சபையை முற்றாக அமுல்படுத்தும் விருப்பம் கொண்டிராத ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எண்ணத்தை மட்டுமே கொண்டிருந்ததுடன், இலங் கைக்கு இராணுவ ரீதியாக உதவிகளை வழங்கி வந்த நாடுகளில் சீனா, பாகிஸ்தான், வியட்நாம், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் மேலும் நெருக்கமானார். இதனால் இந்தியா ராஜபக்ஷவின் இராணுவ நட வடிக்கைகளில் பங்காளியாக மாறியது. இராணுவ நடவடிக்கைகளின் முடிவில் ‘இந்தியாவின் யுத்தத்தையே’ தான் செய்துமுடித்ததாக ராஜ பக்ஷ கூறியதிலிருந்து இந்தியாவின் பங்கை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தப் பங்களிப்புகளுடன் இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது. FTA என்ற வர்த்தக ஒப்பந்தத் தைக் கொண்டு இலங்கையின் இறக்குமதி வர்த்தகத்தில் அதிகமான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. இதனால் இலங்கைக்கு ஏற்றுமதி களைச் செய்யும் உலக நாடுகளில் இந்தியா முதலிடத்திற்கு வந்துள் ளது. அதற்கேற்ற அளவு பயனை இலங்கை அடையவில்லை. இந்தியாவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இலங்கைக்கு இன்னும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஏற்கெனவே 1987 உடன் பாட்டை அடுத்துத் திருகோணமலைத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள எண்ணெய் சேகரிப்புக் குதங்களைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தது மட்டுமன்றி இலங்கை எரிபொருள் எண்ணெய் வர்த்தகத்தை இந்தியன் ஒயில் கம்பனியினூடாக அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. பரவலான சேவைகளை வழங்கும் CEPA என்ற உடன் படிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கையை நிர்ப்பந்தித்து வரு கிறது. இதன் மூலம் இந்திய சேவைத்துறை இலங்கையை ஆக்கிர மிக்கும் நிலை ஏற்படும். நோர்வேயிடம் ஒப்படைக்கப் பட்டிருந்த, மன்னார் தீவில் எண்ணெய் அகழ்வதற்கான பொறுப்பை இந்தியா தட்டிக் கொண்டது. இதனூடாக மன்னார் கடற்பரப்பு அதன் கட்டுப் பாட்டிற்குள் வந்துள்ளது. காங்கேசன்துறைத் துறைமுகம், சீமெந்துத் தொழிற்சாலை, வடக்கில் புகையிரதப் பாதையையும் பெருந்தெருக் களையும் அமைத்தல் போன்றவற்றை இந்தியா பெற்றுக் கொண்டது. கிழக்கு மாகாணத்தில் சம்பூரில் அனல் மின் நிலையத் திட்டத்தை அமைப்பதற்கான பொறுப்பு இந்தியாவிடம் இருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் புல்மோட்டை, திருக்கோவில் ஆகிய இடங்களிலுள்ள இல்மனைட் கனியத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயல்கிறது. கிழக்கில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில்

இந்தியக் கம்பனிகள் பயிர்ச்செய்கைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளன. இந்தியக் கம்பனிகளின் தொழிற்சாலைகள் இங்கு தனியாகவும், கூட்டு முயற்சியாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையின் தேயிலை வர்த்தகத்தினை இந்தியா கட்டுப்படுத்துகிறது. தேயிலைப் பெருந் தோட்டக் கம்பனிகளில் இந்தியர்களின் பங்குகள் அதிகரித்துள்ளன.

அதே போன்று, சீனாவும் இலங்கை அரசுடன் நெருக்கமான உறவு களை ஏற்படுத்தி அம்பாந்தோட்டைத் துறைமுக நிர்மாணம், கடுகதி நெடுஞ்சாலைகளை அமைத்தல், நுரைச்சோலை அனல் மின் திட்டம் போன்றவற்றினூடாக இலங்கை மீதான தன் செல்வாக்கை நிலை நாட்டிக் கொண்டுள்ளது. இந்தியாவை விடப் பலமடங்கு அதிகளவில் நிதியுதவிகளைச் சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது. சீனாவின் முத லாளித்துவப் பொருளாதார வளர்ச்சியும் அதன் சந்தை விஸ்தரிப்பும் இலங்கை மீது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் நிலைமைக்கு இட்டுச் செல்லலாம்.

தொழில் நுட்பப் பரிமாற்றல், வாகன வர்த்தகம், மேல் கொத் மலைத் திட்டம் போன்றவற்றினூடாக ஜப்பான் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டுள்ளது. மருந்து, மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றினூடாக அமெரிக்க ஏகாதிபத்தியம் பாரிய கட்டுப்பாட்டை இலங்கை மீது செலுத்தி வருகிறது. இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் அமெரிக்காவே முதலாவது நாடாக இருக்கிறது. இவற்றைத் தவிர அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகள் இலங்கை தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கு உதவுவது போன்று பாசாங்கு செய்து கொண்டும் இலங்கை மீது போர்க் குற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விடுத்துக் கொண்டும் இலங்கை அரசை ராஜதந்திரரீதியாக மிரட்டி வருகின்றன.

ஐ.நா. சபையும் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணைகளை மேற் கொள்ள வேண்டுமென வலியுறுத்தி வருவதுடன், இலங்கை நிலைமை களை ஆராய ஐ.நா. விசாரணைக் குழுவொன்றை நியமிக்க இருப்ப தாகவும் தெரிவித்து வருகிறது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்துள்ள தமிழர்களின் மேட்டுக்குடி யினர் 'நாடுகடந்த தமிழீழ அரசை' அமைப்பதற்கு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் இசைவாக நடந்து கொள்வதன் மூலம் இலங்கை அரசின் மீது நெருக்குதல்களைக் கொடுத்து வருகின்றன. இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் ஐரோப்பிய நாடுகள் வழங்கி வந்த GSP+ வரிச் சலுகை இடைநிறுத்தப்படவுள்ளது. யுத்தம் உக்கிர மாக நடந்து கொண்டிருக்கும் போது பெருந்தொகைப் பணத்தை இலங்கைக்குக் கடனாக வழங்கிய சர்வதேச நாணய நிதியம் பல கடுமையான நிபந்தனைகளை இலங்கை மீது விதித்துள்ளது. வரவு

செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை அரைவாசியாகக் குறைக்கவும் (இதனால் பொருட்களின் விலைகளையும் வரிகளையும் அதிகரிப்பதைத் தவிர இலங்கைக்கு வேறு வழி இருக்க முடியாது) இலவசக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கு ஒதுக்கும் நிதியைக் குறைக்கும்படியும் ஓய்வூதியத்ததைக் குறைக்கும்படி அல்லது நீக்கும் படியும் நிர்ப்பந்தித்துள்ளது. இலங்கையை முற்றுமுழுதான சுற்றுலா நாடாக ஆக்கும்படியான நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

அரச கட்டுப்பாட்டிலிருந்த தொழிற் துறைகள் அனைத்தும் பல் தேசியக் கம்பனிகளுக்கு விற்கப்பட்டுள்ளன. உணவு, விவசாயத் துறை யிலும் அமெரிக்க பல்தேசிய கம்பனிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. 1950களிலும் 60களிலும் 70களிலும் கட்டப்பட்ட தேசியப் பொருளா தாரம் முற்றாகச் சீரழிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுந்திரக் கட்சியில் இருந்த தேசிய முதலாளி வர்க்க ஆதிக்கமும் நிகழ்ச்சிநிரலும் (1950களில், 1960களில், 1970களில் இருந்த நிலைமை) ராஜபக்ஷவின் தலைமையிலான நிகழ்ச்சிநிரல் களினூடாக முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இலங்கை அரச கட்டமைப்பில் தேசிய முதலாளித்துவ அபிலாட்சைகள் முற்றாகப் புறந் தள்ளப்பட்டுள்ளன. மகிந்த சிந்தனை என்ற ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்தங்கிய கிராமங்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிட் டிருந்தாலும், சிறிய சிறிய திட்டங்களுக்கும் அந்நிய நாட்டு உதவி களும், முதலீடுகளும் வரவழைக்கப்படுகின்றன.

**அடிப்படை முரண்பாடு**

அரசியல், பொருளாதார, பண்பாட்டு விடயங்களில் நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களைக் காண முடிவதுடன், பெருமுதலாளித்துவ / தரகு முதலாளித்துவ, அதிகார முதலாளித்துவ வர்க்கங்கள் இலங்கையின் ஆளும் வர்க்கங்களாக இருக்கின்றன. இந்த வர்க்கங்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் நவகொலனித்துவ அரசாக இலங்கை அரசு இருக் கிறது. இலங்கை அரசு பௌத்த சிங்கள பழைமைவாத, பெருமுத லாளித்துவ / தரகு முதலாளித்துவ நவகொலனித்துவ அரசாகிறது. தொழிலாளிகள், விவசாயிகள், சிறு வியாபாரிகள், மத்தியதர வர்க்கத் தினர், பெண்கள், இளைஞர்கள், சிறுபான்மைத் தேசிய இனங்கள் போன்ற பிரிவினர் அதனால் ஆளப்படுபவர்களாக இருக்கின்றனர்.

ஏகாதிபத்தியம், நவகொலனித்துவம், பெரும்/தரகு முதலாளித்துவம் அதிகாரத்துவ முதலாளித்துவம் என்பவற்றுக்கும் சோஷலிஸத்திற்கும் இடையில் அல்லது ஏகாதிபத்திய, நவகொலனித்துவ, பெரும்/தரகு முதலாளி, அதிகாரத்துவ முதலாளி வர்க்கங்கட்கும் தொழிலாளர், விவசாயி வர்க்கங்கட்குமிடையிலான முரண்பாடு இலங்கையில் இருக்

கும் அடிப்படை முரண்பாடாகும். பேரினவாதத்திற்கும் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்குமிடையான முரண்பாடுகளும் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை போன்ற முரண்பாடுகளும் துணை முரண்பாடுகளாக இருக்கின்றன. இலங்கை அரசு, பேரினவாத, சிறுபான்மைத் தேசிய இனங்களை அடக்கும் அரசாக நிறுவனப்படுத்தப் பட்டுள்ளதால் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகப் பேரினவாத அரசிற்கும் சிறுபான்மைத் தேசிய இன மக்களுக்குமிடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாக மேலெழும்பியுள்ளது. இந்த முரண்பாடு தீர்க்கப்படவோ தணிக்கப்படவோ வேண்டும்.

1505ஆம் ஆண்டிலிருந்து போர்த்துக்கேயரினதும், பின்பு 1658ஆம் ஆண்டிலிருந்து டச்சுக்காரரினதும், பின்பு 1796ஆம் ஆண்டிலிருந்து 1948ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயரினதும் கொலனியாக இலங்கை இருந்தது. இலங்கை முழுவதையும் 1815ஆம் ஆண்டு ஒரே ஆட்சியின் கீழ் ஆங்கிலேயர் கொண்டு வந்தனர். 1948ஆம் ஆண்டு இலங்கையின் ஆட்சியை இலங்கையின் பெருமுதலாளித்துவ வர்க்கத்தினரின் கைகளுக்கு மாற்றினர். மாற்றும் போது, வெஸ்ற்மின்ஸ்டர் பாராளுமன்ற முறையில் சோல்பரி பிரபுவினால் வடிவமைக்கப்பட்ட அரசியல் யாப்பின் அடிப்படையிலான ஆட்சி முறையைத் திணித்து விட்டுச் சென்றனர். அதில் சிறுபான்மையினருக்குச் சமவுரிமையை உறுதிசெய்யாது சலுகை வழங்கப்பட்டிருந்தது. 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட யாப்பு பிரித்தானியாவுடனான தொடர்புகளைத் துண்டிக்கும் விதத்தில் அமைந்தது. அந்த யாப்பின் மூலம் இலங்கை பௌத்தத்துக்குச் சிறப்பிடம் வழங்கும் குடியரசானது.

1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட யாப்பு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகம் செய்ததுடன் இலங்கையை அந்நிய சக்திகளுக்குத் தாரைவார்ப்பதற்கு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அதன் மூலம் தனியாள் சர்வாதிகாரமும், நிர்வாக பாசிசமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆட்சி முறையாக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியினால் தொடக்கி வைக்கப்பட்ட இவ்வாட்சி முறை 1994இற்குப் பிறகு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் சந்திரிகா குமாரதுங்கவினாலும் 2005ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷவினாலும் மேலும் மேலும் பாசிசத் தன்மையுடன் நிலைநாட்டப்பட்டுள்ளது எனலாம். ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட் இராணுவ நடவடிக்கைகளினாலும், பாதுகாப்புக் கெடுபிடிகளினாலும், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கடுமையான நடைமுறைகளாலும், செய்யப்பட்ட படு கொலைகள், காணாமற் போதல்கள், சாதாரண கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான அச்சுறுத்தல்கள் போன்றன மூலம் பாதுகாப்பை மையமாகக் கொண்ட பாசிச ஆட்சி முறை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம், இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இவ் வருடம் ஜனவரி மாதம் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜ பக்ஷ வெற்றி பெற்று இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியானார். அதனையடுத்து அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் இராணு வத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவச் சட்டத்தை மீறிச் செயற்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதி ரான நடவடிக்கைகளாகத் தமிழ் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்திய இராணுவ நடவடிக்கைகளில் கூட்டாகச் செயற்பட்ட இராணுவ நடவ டிக்கைகள் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு ஓரிரு மாதங்களில் மகிந்த ராஜபக்ஷவிற்கும் சரத் பொன்சேகாவிற்கும் இடையிலான முரண்பாடுகள் வலுத்தன. இதனால், மகிந்த ராஜபக்ஷ, இராணுவச் சதி ஏற்படக் கூடும் என்ற சந்தேகத்தில், இந்தியாவின் ஆலோசனைப் படி, தன் பதவிக்காலம் முடிவடைய ஒரு வருடம் இருக்கும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். அவரை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பவற்றின் ஜனாதிபதி வேட்பாளராக சரத் பொன்சேகா போட்டியிட்டதற்குப் பின்னணியில் அமெரிக்க ஏகாதிபத் தியம் இருந்ததற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏறக் குறையப் பனிப் போரே நடந்தது. இந்திய ஆசீர்வாதம் பெற்ற மகிந்த ராஜபக்ஷ வென்றார். ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லில் மகிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஆறு ஆசனங்கள் குறைவான நிலையில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இத் தேர்த லுடன் சிறுபான்மையின் கட்சிகளினதும், சிறிய கட்சிகளினதும் பலமும் திட்டமிட்ட வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட அமைச்சரவைப் பொறுப்புக் களில் பெரும் பகுதியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் இன்னொரு சகோதர ரான கோத்தாபய ராஜபக்ஷவும் எடுத்துக் கொண்டுள்ளனர். இதன் மூலம் ஒரு குடும்ப ஆட்சி நிறுவப்பட்டுள்ளது.

தேசிய இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் அரசியல் தீர்வு காண்பதை அடியோடு மறுத்துவரும் மகிந்த ராஜபக்ஷ, அரசி யல் யாப்பில் ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருப்பதைத் தடுக்கும் உறுப்புரையை திருத்தி ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல குறைபாடுகள் இருந்த போதும் சிறிய கட்சிகளுக்கும், சிறுபான்மையினக் கட்சிகளுக்

கும் வாய்ப்பைத் தருகின்ற விகிதாசார தேர்தல் முறையை மாற்றி யமைக்க இருப்பதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இவை யாவும் தனியாள் சர்வாதிகார பாசிச ஆட்சி முறையை நிலைநிறுத்தும் செயற்பாடுகளாகும்.

இதனால் பாராளுமன்றத்தில் தரகு முதலாளி வர்க்கம், அதிகாரத் துவ முதலாளி வர்க்கம் என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியுமே மீண்டும் பாராளு மன்றத்தைப் பங்கு போட்டுக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்.

இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் 60இற்கு மேற்பட்ட கட்சி கள் இருக்கின்றன. அவையாவும் ஐக்கிய தேசியக் கட்சியுடனோ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனோ கூட்டுச் சேர்ந்துள்ளன. வடக்கு, கிழக் கில் செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பழைமைவாத தமிழ்த் தேசியவாதத்தை முன்னெடுக்கும் இந்தியாவின் முகவராகச் செயற் படுகிறது. முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள் ஏறக்குறைய எல்லா மும் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளன. முஸ்லிம் மக்களிடையே செயற்படும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சி யுடனும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து பிரிந்தவர்கள் யாவ ரும் அரசாங்கத்துடனும் இணைந்துள்ளனர். அதே போன்று மலையகத் தமிழ் மக்களிடையே செயற்படும் எல்லாக் கட்சிகளும் அரசாங்கத் துடன் இணைந்துள்ளன. ஜனநாயக மக்கள் முன்னணி ஐக்கிய தேசி யக் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றது. சிறு முதலாளித்துவ அடிப்படையைக் கொண்டு 1971, 1988ஆம் ஆண்டுகளில் ஆயுதக் கிளர்ச்சியைச் செய்த ஜே.வி.பி. மகிந்த ராஜ பக்ஷவுடன் இணைந்து சிங்களத் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தற்போது முன்னாள் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமையில் ஜனநாயக தேசிய முன்னணி என்ற பெயரில் இயங்குகிறது. அது தன்னை இடதுசாரிக் கட்சியென்று அழைத்துக் கொண்டாலும் அது பேரினவாதக் கட்சியேயாகும்.

மகிந்த ராஜபக்ஷவுடன் திரிபுவாத ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி யும், லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய ட்ரொட்ஸ்கியக் கட்சிகளும் இணைந்து அரசாங்கத்துடன் இருக் கின்றன. இதைத் தவிர, சில ட்ரொட்ஸ்கியக் கட்சிகள் பாராளுமன்றத் திற்கு வெளியில் இயங்குகின்றன.

இந்தச் சூழ்நிலைகள் புரட்சிகர பாட்டாளிவர்க்க மாக்சிச லெனி னிசக் கட்சியொன்றின் பணியையும், வளர்ச்சியையும் வேண்டி நிற்கின் றன. அதற்குரிய புரட்சிகர தத்துவார்த்தை கொண்ட மாக்சிச லெனி னிசக் கட்சியாகப் புதிய-ஜனநாயக கட்சியே இருக்கிறது. எமது கட்சி தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து அரசின் அடக்கு முறைகள் வேகமாக

வளர்ந்து வந்துள்ளன. திரிபுவாதிகள், ட்ரொட்ஸ்கிவாதிகள், தமிழ், சிங்கள குறுந்தேசியவாதிகள் போன்றோரின் சவால்களுக்கு முகம் கொடுத்துத் தன்னைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. அதன் இயங்கு தளத்தை நாடளாவிய ரீதியில் அனைத்துத் தேசிய இனங்களுக்கிடை யேயும் முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

இலங்கை மக்களுக்கான தேசிய ஜனநாயகம் கூட இன்னும் நிறைவு செய்யப்படவில்லை.

இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் தேசிய ஜனநாயகத்தை நிலை நாட்டும் என்று எதிர்பார்க்க முடியாது என்பது தெளிவாகிறது. நிறுவன மாகியுள்ள பாராளுமன்ற-ஜனாதிபதி ஆட்சிமுறை மூலம் தேசிய ஜன நாயகத்தை நிலைநாட்ட முடியவில்லை. மாறாக ஆளும் வர்க்கங்கள் பௌத்த சிங்கள ஆதிக்கத்தை நிறுவனமாக்கியுள்ளதுடன் ஏகாதிபத்தி யத்தின் வாடிக்கையாளர்களாகி நவகொலனித்துவத்தைப் பூரணமாகத் தழுவிக் கொண்டுள்ளன.

நிலப்பிரபுத்துவமும், நவகொலனித்துவ அரசும், ஏகாதிபத்திய வாடிக் கையாளர்களும் மறுக்கும் தேசிய ஜனநாயகத்தை வென்றெடுக்க வேண்டியது அனைத்து இலங்கை மக்களினதும் எதிர்பார்ப்பும் கடமை யுமாகிறது. இந்த தந்திரோபாய தேசிய ஜனநாயக வேலைத் திட்டம், அடக்கப்படும் தேசிய இனங்களின் அரசியல் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், ஜனநாயகக் கட்சிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகள், தொழிற்சங்கங்கள், விவசாய அமைப்புகள், கலை இலக்கிய அமைப் புக்கள் மற்றும் புத்திஜீவிகளையும் கொண்ட பரந்துபட்ட ஐக்கிய முன் னணியொன்றால் முன்னெடுக்கப்பட வேண்டியதாகும். இவ் வேலைத் திட்டத்தில் அரசியல் பொருளாதார தீர்மானங்களை எடுப்பதில் மக்கள் முடிவெடுப்பவர்களாக மாறும் நிலையில் மக்களின் கைகளுக்கு அதிகாரத்தைக் கொண்டு செல்லவும் இலங்கையின் சுதந்திரம், இறைமை, ஐக்கியத்தை உறுதி செய்யும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் தேசிய இனங்களுக்குச் சமத்துவம், சுயாட்சி, சுய நிர்ணய உரிமையை உறுதிசெய்யவும் தேசிய பொருளாதாரத்தையும் தேசிய பண்பாட்டையும் கட்டியெழுப்பவும் திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

இவ் வேலைத்திட்டத்தை வென்றெடுக்கப் பாராளுமன்ற அரசியல் பாதைகளுக்கப்பால் வெகுஜனப் போராட்ட அரசியல் மார்க்கம் முன் னெடுக்கப்படவேண்டும்.

மேற் குறித்த கட்டம் எமது கட்சி முன்வைக்கும் புதிய-ஜனநாயக புரட்சியின் முன்தேவையாகிறது. இலங்கை வளர்ச்சியடைந்த முதலா ளித்துவ நாடாக இல்லாதபடியால் புதிய-ஜனநாயகப் புரட்சி முதற் கட்டத் தேவையாகிறது. புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களினூடா

கத் தொழிலாளர், விவசாயிகள் ஐக்கிய முன்னணியில் அனைத்துத் தேசிய இனங்களும், சுரண்டப்படும் வர்க்கங்களும், ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசபக்த சக்திகள், தேசிய முதலாளித்துவ, சிறு முதலாளித் துவ வர்க்கங்களை அணிதிரட்டி ஏகாதிபத்தியத்தையும், பெரும்/தரகு முதலாளித்துவத்தை தோற்கடித்து, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அந்தந்த இனங்களின் சுய விருப்பின்படி உறுதி செய்து, நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களையும் அகற்றி சோஷலிஸக் கட்டு மானங்களை முன்னெடுக்க வாய்ப்பான முன்தேவையை தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் மாக்சிச லெனினிசக் கட்சியின் வழிகாட்ட லிலும் தலைமையிலும் முன்னெடுக்கப்படும் புரட்சியே புதிய-ஜனநாயக புரட்சி. இது புரட்சியின் முதற் கட்டமாகும். இரண்டாம் கட்டம் சோஷ லிஸப் புரட்சி ஆகும். இதுவே அடிப்படை முரண்பாட்டைத் தீர்க்கும் வழிவகை ஆகும். சோஷலிஸக் கட்டுமானத்தினூடாக நாம் வர்க்க மற்ற உலகத்தைத் தரிசிக்க, வர்க்கக் கருவியான அரசு உதிரும் கம்யூனிஸ்ட் யுகத்தை அடைய முடியும்.

**பிரதான முரண்பாடாகத் தேசிய இனப்பிரச்சினை**

1948ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையை பெரும்/தரகு முதலா ளித்துவ வர்க்கத்திடம் ஒப்படைத்துச் சென்ற போது சோல்பரி பிரபு வினால் வெஸ்ற்மின்ஸ்டர் பாராளுமன்ற முறையில் அமைக்கப்பபடட அரசியல் யாப்பையும் அதன் அடிப்படையிலான பிரித்தாளும் ஆட்சி முறையையும் இலங்கை மக்கள் மீது திணித்து விட்டுச் சென்றனர். அந்த யாப்பில் தேசிய இனங்களுக்கிடையே சமத்துவத்தை நிலை நாட்டுவதற்குப் பதிலாக சிறுபான்மைத் தேசிய இனங்களுக்குச் சலுகையே இருந்தது. அதாவது சிறுபான்மை இனங்களைப் பாதிக்கும் வகையில் பாராளுமன்றம் சட்டமியற்ற முடியாது என்ற ஏற்பாடு உறுப் புரை 29இல் இருந்தது. எனினும் "சுதந்திரப் பாராளுமன்றம்" 1948ஆம் ஆண்டு இயற்றிய பிரஜா உரிமைச் சட்டத்தினால் மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. 1956ஆம் ஆண்டு சிங்கள மொழி மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியெனப் பாராளுமன்றம் சட்டமியற்றியது. இவை யாவும் சட்டபூர்வமானவை என்று நீதிமன்றங்களும் தீர்ப்பளித்தன. அதாவது இறைமையுள்ள பாராளுமன்றம் எந்தவொரு சட்டத்தையும் ஆக்கலாம் என்ற அடிப் படையில் அச் சட்டங்கள் நியாயப்படுத்தப்பட்டன. தமிழ் மக்கள் மீதும் மலையகத் தமிழ் மக்கள் மீதுமான இன வன்முறைகள் 1958, 1977, 1983, 1986ஆம் ஆண்டுகளிலும் முஸ்லிம்களுக்கு எதிரான இன வன் முறைகள் அவ்வப்போதும் கட்டவிழ்த்து விடப்பட்டன. கல்வி, வேலை வாய்ப்பில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர். திறமையின் அடிப் படையிலன்றி இன விகிதாசாரப்படியே கல்வி, வேலைவாய்ப்புக்கள்

வழங்கப்பட்டன. இது பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு வாய்ப்பானது. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட சிங்களப் பேரினவாதக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இராணுவ முகாங்களும் நிறுவப்பட்டன. இதனால் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையே பாதுகாப்பற்றதானது. இதே போன்று முஸ்லிம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் இன ஒடுக்குமுறைக்குள்ளாகினர்.

இந் நிலைமையில் தமிழ் அரசியல் தலைமைகளிடமிருந்து காலத்திற்குக் காலம் பல கோரிக்கைகள் எழுந்தன.

1. *ஆரம்பத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் 50க்கு 50 என்ற சம பிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைத்தார். அதனைப் பெரும்பான்மை இனத் தலைவர்கள் நிராகரித்தனர்.*

2. *எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு-கிழக்கில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தும் படி கோரியது. அதற்காகப் பல அமைதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் வளர்ச்சிப் போக்கில் 1956இல் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் அதிகாரப் பகிர்விற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவ் ஒப்பந்தத்திற்குப் பௌத்த பிக்குகள் உட்படப் பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து பண்டாரநாயக்க அதனைக் கிழித்தெறிந்தார். 1965 இல் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம் பேரினவாதிகளினதும் திரிபுவாதிகளினதும் ட்ரொட்ஸ்கிவாதிகளினதும் எதிர்ப்பினாலும் பிற்காலத்தில் ஜே.வி.பியை அமைத்த தலைவர்களின் எதிர்ப்பினாலும் கைவிடப்பட்டது.*

3. *1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பை ஆக்கும் போது தமிழ்த் தலைமைகளின் சமஷ்டிக் கோரிக்கை கவனிக்கப்படவில்லை. ஆகக் குறைந்த அதிகாரப் பகிர்விற்கான ஏற்பாடுகள் கூடச் செய்யப்படவில்லை. வடக்கு-கிழக்கில் தமிழ் மொழி ஆட்சி மொழியென ஏற்பாடு செய்த தமிழ் மொழி விசேட அமுலாக்கல் சட்ட ஏற்பாடுகள் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டன. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சித் தலைமைகள் தரகு முதலாளித்துவ வர்க்கத் தலைமைகளாதலால், அவர்களிடம் சாதாரண சிங்கள தொழிலாளிகள், விவசாயிகளின் ஆதரவைத் திரட்டும் எண்ணம் இருக்கவில்லை. பழைமைவாதச் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்கு எதிராகப் பழைமைவாதத் தமிழத் தேசியவாதத்தையே தமிழ்த் தலைமைகள் உயர்த்திப் பிடித்தன.*

4. *இதன் வளர்ச்சியாக 1976ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் மக்க ளுக்குத் தமிழீழம் என்ற தனியரசு வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அடிப்படையில் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங் களைப் பெற்றுப் பிரதான எதிர்க்கட்சியானது.*

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையில் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பினூடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசியல் யாப்பிலும் தமிழ் மக்களின் தேசிய அபிலாட்சைகளை உறுதி செய்யும் அதிகாரப் பகிர் வோ அரசியல் தீர்வோ உள்ளடக்கப்படவில்லை. தமிழ் மக்களின் உரிமைக்காகத் தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்ட எழுச்சி அரச பயங்கரவாதத்தினால் ஒடுக்கப்பட்டதுடன் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தமாகவும் மாறியது. தமிழ் இளைஞர்கள் தனி நாட்டைக் கோரி ஆயுத நடவடிக்கைகளுக்குத் தள்ளப்பட்டனர். இச் சூழ்நிலையை இந்தியா சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. 30இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் அமைப்புகளுக்கு ஆயுதப் பயிற்சி அளித்ததுடன் அவற்றின் நடவடிக்கைகளையும் இந்தியா திட்டமிட்டுக் கொடுத்தது.

இந் நடவடிக்கைகளினூடாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவை இந்தியாவின் இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வந்து 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய உடன்படிக்கையை இலங்கை மீது திணித்ததோடு மாகாண சபை முறையை இலங்கை மக்கள் மீது தமிழ் மக்க ளுக்குத் தீர்வாகத் திணித்தது. 1987ஆம் ஆண்டு உடன்படிக்கையுடன் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம், அதற்கு உடன்படாத தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இராணுவ நடவடிக்கை களை மேற்கொண்டது. 1990ஆம் ஆண்டு திருப்பி அழைக்கப்படும் வரை இந்திய இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் பாரிய அழிவுகளை மேற்கொண்டது.

இக் காலகட்டத்திற்குப் பிறகு தனியொரு சக்தியாக மாறிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1991இல் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ வுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அவர் 1993ஆம் ஆண்டு தமி ழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் கொல்லப்பட்டார். 1994இற் குப் பிறகு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதிலும் உடன்பாடு எய்தப்படவில்லை. சந்திரிகா தழிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் உடன்பாட்டை ஏற்படுத்தாமலே மாகாண சபை முறைமையை விட அதிகாரங்கள் கூடிய (ஆனால் கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிரித்ததுடன் கிழக்கு மாகா ணத்தை மேலும் மூன்றாகப் பிரித்து) பிராந்தியங்களின் ஒன்றியம் என்பதை அறிமுகம் செய்ய முற்பட்டாலும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்ததால் அது கைவிடப்பட்டது. சந்திரிகாவைத்

தமிழீழ விடுதலைப் புலிகள் கொல்ல எடுத்த முயற்சியிலிருந்து அவர் படுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

பின்னர் 2000ஆம் ஆண்டில் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். அவரின் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றிற் போதிய முன்னேற்ற மின்மையால் விடுதலைப் புலிகள் 2003ஆம் ஆண்டு நடுவில் பேச்சுக் களினின்று விலகிக்கொண்டனர். 2004ஆம் ஆண்டு டிசம்பரில் வடக்கு கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பங்களிப்புடனான சுனாமி கட்ட மைப்பை உயர் நீதிமன்றம் 2005ஆம் ஆண்டில் செல்லுபடியற்ற தாக்கியது. ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற பேரினவாத அமைப் புக்கள் முறையிட்டதை அடுத்தே உயர் நீதிமன்றம் அத் தீர்ப்பை வழங்கிது. 1987ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி, வட மாகா ணமும், கீழ் மாகாணமும் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தன. அதனையும் உயர் நீதிமன்றம் பிரித்தது.

அத்துடன் மாகாண சபை முறையில் மாகாண சபைகளுக்கென உறுதி செய்யப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களையும் வழங்க முடியாது என்பதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட நிலையில் எந்தவொரு அதிகாரப் பகிர்வும் தமிழ் மக்களுக்கு இல்லை என்பதே இலங்கை அரசின் நிலைப்பாடாக இருக்கிறது. இந் நிலையில் பிரதான முரண்பாடாக இருந்த தேசிய இனப் பிரச்சினை இன்னும் அப்படியே இருக்கிறது.

தமிழ் மக்கள் மத்தியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட தேசியம் முற் போக்கானதாக இல்லாதபடியால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கம் இராணுவ ரீதியாக முறியடிக்கப்பட்ட பிறகு பழைமைவாதத் தமிழ்த் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் உண்மையான முகவராகச் செயற்படுகிறது.

இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றுவாய் 1976ஆம் ஆண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தனித் தமிழ் ஈழமே தீர்வெனத் தீர்மானம் நிறைவேற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியே ஆகும். அதனுடைய தவறான போக்கே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்திற்கும் அடித்தளமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2002ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் ஏகத் தலைமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே என்று ஏற்று அங்கீகரித்தது. 22 பாராளுமன்ற

ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முகவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து வந்தது. பேரினவாதத் தேசியத்திற்குப் பதிலாகத் தமிழ்த் தேசிய வாதத்தைத் தமிழ்த் தேசியத் தலைமைகள் முன்னெடுத்த விதம் போல அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய மேலா திக்கத்திற்கும் தமிழ்த் தேசிய இனத்தை விசுவாசிகளாக்கும் தமிழ்க் குறுந் தேசியவாதத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏற்றுச் செயற்பட்டது. பேரினவாதமும் குறுந் தேசியவாதமும் ஒன்றை யொன்று போஷித்து தேசிய இன முரண்பாட்டைப் பிரதான முரண் பாடாக்கி நாட்டிற்கும் மக்களுக்கும் அழிவை ஏற்படுத்தின. இதனால் கடந்த 30 வருடங்களாக, 2009 மே மாதம் வரை தமிழ் மக்க ளுக்கும். சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கும் ஏற்பட்ட அழிவுகள் சொல்லிலடங்கா. தனித் தமிழ் ஈழமே இலங்கைத் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டும் என்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக அதற்கான கோரிக்கையும், போராட்டமும் ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் தலையீடுகளை அதிகரிக்கச் செய்து இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கைக்கும் பேரழிவை ஏற்படுத்தி இலங் கையின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை போன்றவற்றைப் பாதிக்கும் என்பதனை எமது கட்சி சுட்டிக் காட்டத் தவறவில்லை. இந்த ஆபத்துக்களைத் தவிர்க்க வேண்டுமானால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சியையும் சமத்துவத்தையும் ஏற்படுத் தும் அரசியல் தீர்வைக் காண வேண்டுமென்று வலியுறுத்தி வெகுஜனப் போராட்டங்களை எமது கட்சி முன்னெடுத்து வந்தது. அதனால் பிரிவினைவாதப் போராட்டத்தின் துரோகிகளெனத் தமிழ்த் தேசியவாதிகளாலும் பிரிவினைக்கு ஆதரவானவர்கள் எனப் பேரின வாதிகளாலும் எமக்கு முத்திரை குத்தப்பட்டது. ஆனால் இன்றும் சிங்களப் பேரினவாதமும் தமிழ்க் குறுந்தேசியவாதமும் தம் பழைய பாதையிலேயே செயற்படு கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சிறு முதலாளித்துவ வர்க்கமாக இருந்தது. ஆனால் அதனிடத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்போ மேலாதிக்க எதிர்ப்போ இருக்கவில்லை. அதுவும் பழைமைவாதத் தமிழ்த் தலைமைகளின் தொடர்ச்சியாகவே இருந்தது. உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்களின் சார்பில் இருந்ததால் அதனையும் சிங்க ளப் பேரினவாத இலங்கை அரசையும் சமதளத்தில் வைத்துப் பார்க்க முடியாது. ஆனாலும் அதனுடைய தவறுகளை எமது கட்சி விமர்சிக் கத் தவறவில்லை.

கடந்த வருடம் மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட்ட பின்னர் புலம்பெயர்ந்த நாடுகளி

லுள்ள தமிழ் மேட்டுக்குடியினர் “தமிழீழப் பிரிவினைக்” கோரிக் கையை “நாடு கடந்த தமிழீழ அரசு” என்ற பெயரில் வெளிநாடு களில் முன்னெடுக்க முயல்கின்றனர். இதற்கு அமெரிக்க, ஐரோப் பிய ஏகாதிபத்தியங்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுவிட்டதாகக் கூறு கின்றனர். அதாவது இலங்கையில் தனித் தமிழீழத்தை ஏற்படுத்தும் நோக்கில் “நாடுகடந்த தமிழீழ அரசை” அமைத்துப் போராடுவதாகத் தெரிவிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றத் திற்கும் வளர்ச்சிக்கும் காரணமான இந்தியாவே அதனை ஒடுக்கி யுள்ளது என்பது மீண்டும், மீண்டும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். 1998ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங் கரவாத இயக்கமென உலக நாடுகளில் முதலாவதாக அமெரிக்காவே தடை விதித்தது என்பதும், அதனை இராணுவரீதியாக ஒடுக்கப் பெரும் பங்காற்றியதும் அமெரிக்காவே என்பதுவும் உறைக்க வேண்டும். கடந்த வருடம் முல்லைத்தீவில் இடம் பெற்ற இறுதி இராணுவ நடவடிக்கைகளின் போது விமானத்தை அனுப்பித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களைக் காப்பாற்றப் போவ தாகக் கூறிக் கழுத்தறுத்ததும் அமெரிக்காவே.

அமெரிக்காவின் தலையீட்டினால் துண்டாடப்பட்ட பால்கன் நாடு களின் தற்போதைய நிலைமையையும் அவை எந்தளவிற்குச் சுதந்திர மாக இருக்கின்றன என்பதையும் விளங்கிப் பட்டறிவாகக் கொண்டால் அதன் உதவியால் இலங்கை துண்டாடப் பட்டாலும் அது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையாக இராது என அறிவோம். (அவ் வாறு துண்டாடப்படாது என்று நம்புகிறோம். ஏனெனில் அமெரிக்கா வுக்குத் தற்போது முழு இலங்கையுமே தேவைப்படுகிறது). எனவே “நாடுகடந்த தமிழீழ அரசு” என்பது குறித்து நாம் மிகவும் எச்சரிக் கையுடனே இருக்கிறோம். எனவே புலம்பெயர்ந்த தமிழ் மேட்டுக் குடியினர் பால்கன் பாணியில் அமெரிக்காவைக் கொண்டு இலங்கை யைப் பிரிக்கலாம் என்று இலங்கை தமிழ் மக்களை மேலும் மேலும் ஏகாதிபத்தியத்தின் பக்கம் தள்ளாமல் இருப்பது நல்லது.

புலம்பெயர்ந்த சாதாரண தமிழ் மக்கள் தமிழ் மேட்டுக்குடியினரின் போலியான, ஏகாதிபத்தியத்துடன் இணைந்து போகும், “நாடுகடந்த தமிழீழ அரசு” என்ற கோஷத்திற்குப் பின் அணிதிரண்டு தொடர்ந்து மாயைக்குள் மூழ்காமல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

அதாவது, புலம்பெயர்ந்த சாதாரண தமிழ் மக்கள் இலங்கையின் சிறுபான்மை மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் போராட்டத்தில் பங்கெடுக்கவோ ஆதரவளிக்கவோ விரும்பினால் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான நிர்ப்

பந்தத்தையும் அழுத்தத்தையும் கொடுக்கும் போராட்டங்களை அவர் களின் புலம்பெயர்ந்த நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப முன்னெடுப்பதே சிறந்த தெரிவாக இருக்கும். தற்போதைய சூழ்நிலையில் தனி நாடல் லாத அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வது சுயநிர்ணய உரிமை இல்லையென்று அர்த்தம் கற்பிப்பவர்கள் உண்மையாகவே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவானவர்களல்லர். இது பேரினவாதத்துடன் சமரசம் செய்யும் போக்கல்ல. ஏனெனில் பேரின வாதத்திற்கு எதிராகப் போராடாமல் எந்தவொரு அரசியல் தீர்வையும் பெற முடியாது.

இலங்கையில் தேசிய ஜனநாயகத்தை நிலைநாட்டி தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் கண்டு, புதிய ஜனநாயக புரட்சி வெற்றி பெறும் சூழ்நிலையில் தமிழ் மக்களின் சுயவிருப்பில் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

இலங்கையில் இரண்டு கோடியே அறுபது லட்சம் மக்கள் வாழ்கின்றனர். 73.9% சிங்களவர்களையும், 12.7% தமிழர்களையும் 7% முஸ்லிம்களையும், 5.5% மலையகத் தமிழர்களையும் கொண்ட பல்லின நாடு. இங்கு பறங்கியர், மலாயர், வேடர்கள் போன்ற சமூகத்தினரும் வாழ்கின்றனர். இங்கு பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களை ஏற்று ஒழுகுபவர்கள் இருப்பதால் இலங்கை பல மதங்களைக் கொண்ட நாடாகவும் விளங்குகிறது. எமது கட்சியின் நிலைப்பாடானது இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிமர் ஆகிய நான்கு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதாகும். அவற்றின் உரிமைகளும் சமத்துவமும் சுயாட்சியும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஐக்கிய இலங் கைக்குள் உறுதி செய்யப்படும் விதத்தில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

அந்தத் தீர்வை வென்றெடுப்பதற்கு அடக்கப்படும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழத் தேசிய இனங்களினது கோரிக்கைகளை முன் வைத்துத், தேசிய இனங்களின் அபிலாட்சைகளை வென்றெடுப்பதற் கான போராட்டம் ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் பெரும்/தரகு முதலா ளித்துவம், நிலப்பிரபுத்துவம் என்பவற்றை நிராகரிப்பதாகப் பெரும்பான் மைச் சிங்களப் பாட்டாளிகள், விவசாயிகளின் ஆதரவைக் கொண்ட தான புதிய வடிவத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தேசிய இனப் பிரச்சினையும் அதனோடு நேரடியாகவோ மறைமுக மாகவோ தொடர்புடைய இயக்கங்களும் முதலாளித்துவப் பண்பு களைக் கொண்டனவாக இருப்பதை மாக்சிசம் கற்பிக்கிறது. இந்த அமைப்புகள் பொதுவாக ஏகாதிபத்தியத்தின் பெரும்.்.தரகு முதலாளி

வர்க்கத்தின் பக்கம் சரியக் கூடிய தடுமாற்றம் கொண்டதாகவே இருக்கும். அமெரிக்க ஏகாதிபத்தியம் பால்கன் நாடுகளைத் துண்டாடிப் பிரதான பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்புவதற்கு எடுத்த நடவடிக்கைகளையும் அது போன்ற நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு அவ்வாறான நடவடிக்கைகளை ஏற்கும் இயக்கங்களின் வாலாக மாக்சிச லெனினிசக் கட்சிகள் செயற்பட முடியாது. ஆனால் தேசிய இனங்களின் அபிலாட்சைகளைக் கருத்திற் கொண்டு அவற்றின் போராட்டங்களை ஐக்கியமும் போராட்டமும் என்ற ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்துடன் அணுகுவதும் மதிப்பதும் அடக்கப்படும் தேசிய இனங்களின் பக்கம் இருக்க வேண்டியதும் கம்யூனிஸ்ட்டுக்களின் தவற முடியாத கடமை ஆகும்.

அதைவிடப், பாட்டாளி வர்க்கத் தலைமையில் தேசிய ஜனநாயகத்திற்கான போராட்டத்துடனும், புதிய ஜனநாயகப் புரட்சியுடனும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைக் கூட்டிணைத்துக் கம்யூனிஸ்ட்டுக்கள் முன்னெடுக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் மாக்சிச லெனினிசக் கட்சியின் நிகழ்ச்சிநிரலில் தேசிய இனப் பிரச்சினை நேரடியாகச் சேர்க்கப்படுகிறது. சுயநிர்ணய உரிமை என்ற பேரில் ஏகாதிபத்திய ஆதரவுடன் உடைக்கப்பட்டுப் பிரிக்கப்பட்ட நாடுகளில் தேசிய இனங்களின் வாழ்வில் தரரீதியாக எவ்வித மாற்றமும் ஏற்படாத போதும் தனி நாடுகளுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

மக்களைப் பிரித்தாளும் ஏகாதிபத்திய பெரும்.்.தரகு முதலாளித்துவ முறைக்கு எதிராக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய இனங்களை ஐக்கியப்படுத்துவதற்காகக் கம்யூனிஸ்ட்டுகள் போராட வேண்டும். சிறு முதலாளித்துவ, தேசிய முதலாளி வர்க்கங்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் காணியற்றோருக்கு காணி வேண்டும் போன்ற சமூகத்தை ஜனநாயகப்படுத்தும் நடவடிக்கைகளில் அச் சக்திகள் ஈடுபடுவதில்லை. அதனால் அவ்வாறான போராட்டங்களை ஒருங்கிணைப்பது கம்யூனிஸ்ட்டுகளின் கடமை ஆகும்.

இவ்வாறான போராட்டங்களில் ஐக்கியமும் போராட்டமும் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையுடன் ஐக்கியப்படும் அதே வேளை எல்லா பேரினவாத நிலைப்பாடுகளுக்கும், ஏகாதிபத்திய, அரசு சார்பான நிலைப்பாடுகளுக்கும் எதிராகப் போராடுவது கம்யூனிஸ்ட்டுகளின் கடமை ஆகும். அந்த நிலைப்பாட்டையே எமது கட்சி இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் கடைப்பிடித்து வருகிறது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலைப்பாடு தேசிய இன ஒடுக்கு முறைக்குத் துணைபோக முடியாது. தேசிய இன விடுதலைக்கு ஆதர வான நிலைப்பாடு ஏகாதிபத்தியத்திற்கும், பெரும்/தரகு முதலாளித் துவத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் ஆதரவாக இருக்க முடியாது.

அதாவது, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக் காமல் பெரும்பான்மை சிங்கள மக்களினது ஏகாதிபத்திய, எதிர்ப்பு, பூகோளமயமாதல் எதிர்ப்பு, நவகொலனித்துவ எதிர்ப்பு, பெரும்/தரகு முதலாளித்துவ, அதிகாரத்துவ முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ எதிர்ப் புப் போராட்டங்களுக்குத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறவோ அவர்களை இணைத்துக் கொள்ளவோ முடியாது. அதே போன்று, சிங்கள மக்களது மேற்படி போராட்டங்களுக்கு ஆதரவளிக்காமலோ அவற்றுடன் இணையாமலோ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கான போராட்டத்திற்குச் சிங்கள மக்களின் ஆதரவையோ பெற்றுக் கொள்ளவோ அவர்களைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளவோ முடியாது. எனவே அடிப்படை முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான வலிமை யான போராட்டத்திற்குத் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் கிடைத்த சூழ்நிலை உரம் சேர்க்கக் கூடும்.

## தொழிலாளர் வர்க்கத்தை அரசியல்மயப்படுத்தி அடிப்படை முரண்பாட்டை வர்க்கப் புரட்சியின் மூலம் தீர்த்தல்

உற்பத்தித் துறையில் அபிவிருத்தியடைந்த, முன்னேறிய தளங்களில் ஈடுபட்டுள்ள முன்னேறிய வர்க்கமான தொழிலாளர் வர்க்கத்தின் புரட் சிகரக் கொள்கை மாக்சிசம். உழைப்பிற்கும் மூலதனத்திற்குமிடையி லான, முதலாளித்துவத்திற்கும் சோஷலிஸத்திற்குமிடையிலான அடிப் படை முரண்பாடுகளைத் தொழிலாளர் வர்க்கப் புரட்சியினாலும் சோஷ லிஸக் கட்டுமானத்தினூடாகவுமே தீர்க்க முடியும். அவ் வர்க்கத்தின் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சி அதனை அணிதிரட்டி அரசி யல் மயப்படுத்திச் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அதன் தலைமையில் புதிய-ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்து சோஷ லிஸத்தை நோக்கி முன்னேற வழிகாட்ட வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பு, பெரும்/தரகு முதலாளித்துவ அதிகாரத்துவ முதலாளித்துவ எதிர்ப்புச் சக்திகளை அணிதிரட்டி முதலாளித்துவத்திற்கு முந்திய நிலப்பிரபுத்துவ மிச்சசொச்ச உறவுகளை அழித்து தேசிய ஜனநாய கத்தையும், தேசிய விடுதலையையும் நிறைவேற்றி சோஷலிஸத்தை நோக்கி மக்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு பாட்டாளி வர்க்கத்தினதும், கம்யூனிஸ்ட் கட்சியினதும் பொறுப்பாகும்.

இலங்கையில் 10,578,000 பேர் உழைப்பாளர்கள். அவர்களில் அரச துறையில் உள்ளோர் 15.5%, தனியார் துறையினர் 42.1%, சுயதொழி லில் ஈடுபடுவோர் 29%, கொடுப்பனவு இல்லாத குடும்ப வேலைகள் செய்வோர் 11%.

வேளாண்மைத் துறையில் 2,476,000 பேர் உழைப்பில் ஈடுபட்டுள் ளனர். அதில் 460,000 பேர் தேயிலை, றப்பர் பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களாவர்.

வெளிநாடுகளில் வேலை செய்வோர் தொகை 1,800,000 என மதிப் பிடப்பட்டுள்ளது. இதில் பெண்கள் 1,000,000க்கும் சற்று அதிகமானோ ராவர். வெளிநாட்டு வேலைவாய்ப்பில் 90% அளவில் மத்திய கிழக் கில் உள்ளதுடன் பெண்களில் ஏகப்பெரும்பாலோர் வீட்டு வேலைக் கமர்த்தப்படட பெண்களாவர்.

2009ஆம் ஆண்டு அரசாங்கக் கணிப்பின்படி வேலையின்மை 5.8% ஆகும். ஆண்களின் வேலையின்மை 4.5% எனவும் பெண்களின் வேலையின்மை 8.6% எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

தாராளமயம், தனியார்மயம் என்பன நிலைநிறுத்தப்பட்ட பிறகு ஸ்தாபனப்படுத்தப்படாத தொழிற் துறைகளின் எண்ணிக்கை அதிக ரித்துள்ளது. தொழிற்சங்கரீதியாக ஸ்தாபனப்படுத்தப்பட்ட துறைகளிலும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை நினைத்த நேரம் வேலையி லிருந்து விலக்குவது போன்று கைத்தொழிற் பிணக்குச் சட்டத்திற்கு மாறான வேலை நிபந்தனைகளைக் கொண்ட நடைமுறைகளால் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் தொழிற்சங்க இயக்கம் பலவீனமாக்கப்பட்டுள்ளது.

தனியார் கம்பனிகளின் தொழிலாளர்களை எந்நேரமாயினும் வேலை யிலிருந்து நீக்கும் முறை சட்ட ரீதியாக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒப்பந்தக் காலத்திற்கு மட்டும் வேலை கொடுக்கும் வாய்ப்பும் கம்ப னிகளின் சுயவிருப்பின் பேரில் ஓய்வு கொடுக்கும் முறையும் பரவலா கக் காணப்படுகின்றன.

அரசாங்கத்துறைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட் டங்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் குறித்த வேலை நிறுத்தத்தினால் தங்களது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட் டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்து வேலை நிறுத்தங்களைச் செயலிழக்கச் செய்யும் நடைமுறைகள் சில ஆண்டு களாக இலங்கையில் வழக்கத்தில் இருந்து வருகின்றன. பல நாடு களில் இவ்வாறான நிலைமை இருக்கிறது. இது சர்வதேச தொழிலா

ளர் சாசனத்தினால் உறுதி செய்யப்பட்ட மூன்று உரிமைகளுக்குப் பாதகமான போக்காகும்.

தனியார் துறைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டங் களில் ஈடுபடும் போது அவற்றைத் தடுத்து நிறுத்தும் வகையில் சிவில் நீதிமன்றங்களில் தடையுத்தரவு கோரி வழக்குகள் தொடுக்கப்படு கின்றன.

தொழிற் திணைக்களம், தொழில் நியாயசபைகள் அல்லது தொழில் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் 1990களின் கடைசிப் பகுதிக்குப் பிறகு, தாராள பொருளாதாரச் சூழலில், ஒப்பீட்டு ரீதியில் பெரும்பாலும் மூலதனத்தின் பக்கமே அதிகமாக அக்கறை செலுத்தும் ஒரு புதிய போக்கு மேலோங்கியிருப்பதை அவதானிக்க முடியும்.

இவை யாவும் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளில் தலையிடுவனவாக அமைந்துள்ளன. நவதாராளவாதப் பொருளாதார நிலைமைகளின் கீழ், ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் கீழ், நவ கொலனித்துவ சூழ்நிலையில், தொழிலாளர்களுக்கு இருந்த உரிமை களும் பறிக்கப்பட்டுள்ளன என்பதையே இவை எடுத்துக் காட்டு கின்றன.

அதே வேளை, நாட்டில் நிலவும் தேசிய இன முரண்பாட்டினால் உழைக்கும் மக்களிடையே இனரீதியான பிளவுகள் அதிகரித்துள்ளன. பேரினவாதத்தின் இன ஒடுக்கலில் காரணமாக சிறுபான்மைத் தேசிய இன உழைக்கும் மக்கள் வர்க்க ரீதியான ஒடுக்குமுறைக்கும் இன ரீதியான ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

கொலனித்துவ காலத்திலும் அதற்குப் பின்பும் ஸ்தாபனப்படுத்தப் பட்டிருந்த தொழிலாளர் வர்க்கமும் இன்று ஸ்தாபனப்பலம் குறைக்கப் பட்ட, ஐக்கியம் குலைந்த நிலையில் இருக்கிறது.

பெருந்தோட்டங்கள் யாவும் நீண்டகால குத்தகையின் அடிப்படை யில் 23 கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றில் கூடிய பங்குகளை இந்தியக் கம்பனிகள் வாங்கியுள்ளன. தேயிலை வர்த்த கத்தில் தொடர்ந்தும் மூன்றாவது இடத்தில் இருந்து வரும் இலங்கை யின் பெயர் தற்போது இந்திய கம்பனிகளால் இல்லாமலாக்கப்பட் டுள்ளது. அதாவது இலங்கைத் தேயிலை சர்வதே ரீதியாக இந்தியத் தேயிலையின் அடையாளத்துடனேயே விற்கப்படுகிறது. அந்நிய ஏற்று மதி வருமானத்தில் இன்னும் 60%ஐப் பெற்றுக் கொடுப்பதாகத் தேயிலை, றப்பர் என்பன இருந்தபோதும், அத் துறையிலுள்ள தொழி லாளர்கள் மிகவும் குறைந்த சம்பளத்தையே பெறுகின்றனர். அவர்க ளுக்கு ஏனைய தனியார் துறைத் தொழிலாளர்கள் போன்று

www.tamilarangam.net

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு ஏற்பவோ, வருடாந்தமோ சம்பள உயர்வுகள் வழங்கப்படுவதில்லை. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சம்பளம் அதிகரிக்கப்படலாம் என்று தோட்டத் தொழிற்சங்கங் களில் சிலவற் றுக்கும் பெருந்தோட்டக் கம்பனிகள் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்குமிடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அதில் முறையான நியாயமான சம்பளத் திட்டமோ சம்பளவுயர்வு பற்றிய திட்டமோ உள்ளடக்கப்படவில்லை. இந்தக் கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளும் தொழி லாளர்களுக்கு நன்மை பயப்பதாக இல்லை. அதனால் தொழி லாளர்கள் இரண்டு வருடங்கட்கு ஒரு முறை போராடியே சம்பள உயர்வைப் பெறவேண்டி யிருக்கிறது. கூட்டு ஒப்பந்தத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் (ஐக்கிய தேசியக் கட்சியினுடைய சங்கம்) பெருந்தோட்டத் தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி (இடதுசாரிச் சங்கங்கள் என்ற ழைக்கப்படுபவை) ஆகியனவே தொடர்ந்து ஒப்பமிட்டு வருகின்றன. அவை தொடர்ந்து சம்பள உயர்விற்கான போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தே வருகின்றன.

தனியார் தொழிற் துறையிலும் அரசாங்கத் துறையிலும் ட்ரொட்ஸ்கிய நிலைப்பாட்டைக் கொண்ட சங்கங்கள் (ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிச் சங்கங்களைத் தவிர) ஓரளவு செல்வாக்கைச் செலுத்தக் கூடியனவாக இருக்கின்றன. அவற்றின் ஐக்கியத்திற்குக் குந்தகமான குழுவாதப் போக்கு பாதகமானதே. அவற்றில் பல அரசியலிலிருந்து பிரிந்த தொழிற்சங்கவாதத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படு கின்றன.

நாட்டில் நிலவும் இனவாதச் சூழ்நிலையாலும் இடதுசாரிக் கட்சி களினதும் தொழிற்சங்கங்களினதும் சந்தர்ப்பவாதத் தவறுகளினாலும் தமிழ்த் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக இருக்கும் தேயிலை, றப்பர் பெருந்தோட்டங்களில் பிற்போக்குத் தொழிற் சங்கங்களே தொடர்ந்து ஆதிக்கஞ் செலுத்தி வருகின்றன. அவற்றில் ஏறக்குறைய எல்லாத் தொழிற்சங்கங்களும் ஆட்சி செய்யும் அரசாங்கத்துடன் இணங்கிப் போகிற தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான நிலைப் பாட்டையே கொண்டுள்ளன.

எமது கட்சி, தனியாகவும் ஏனைய முற்போக்குச் சக்திகளுடன் இணைந்தும், புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தை எல்லாத் தொழிற் துறைகளிலும், எல்லாப் பிரதேசங்களிலும் கட்டி வளர்க்க வேண்டும். 1960களில் புரட்சிகர தொழிற்சங்க இயக்கம் பலமாக இருந்தது. அதன் பட்டறிவுகளுடன் நவகொலனித்துவ சூழலுக்கேற்ற தொழிற்சங்க இயக்கம் கட்டப்பட வேண்டும். ஒன்றிணைக்கப்படக் கூடிய இடத்தில் எல்லா இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களையும் ஐக்கியப்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யும் சமூகரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ள தொழிற் துறைகளைப் பொறுத்த வரையில் தொழிலாளர் வர்க்க ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டும் தொழிற்சங்க வேலைமுறைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், இருக்கின்ற தொழிற்சங்கங்களினூடாகத் தனித்தனிக் கோரிக்கைகளின் அடிப்படையில் ஐக்கியப்பட்ட வேலைகளை முன் னெடுக்க வேண்டும்.

தொழிலாளர்களுடைய நாளாந்தப் பிரச்சினைகளிலும், தேவைகளி லும் புரட்சிகர தொழிற்சங்க இயக்கம் பங்கெடுப்பதுடன் தொழிலாளர் களைப் புரட்சிகர அரசியலின் கீழ் அணிதிரட்ட வேண்டிய பாரிய பொறுப்பையும் கொண்டே செயற்பட வேண்டும். ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் ஏகாதிபத்திய பூகோளமயமாதலுக்கு எதிராகவும் சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம், பல் தேசியக் கம்பனிகள் போன்றவற்றுக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்தின் போலியான அபிவிருத்திக் கொள்கைகளுக்கு எதிராகவும் பல முனை களிற் செயற்படுவதாகவும் எல்லோருக்கும் உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றை உறுதி செய்யும் வகையிலும் மாற்று அபிவிருத்திக் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் வலியுறுத்தியும், பல முனைகளிலும் தொழிற்சங்க இயக்கத்தினூடாகவும் அரசியல் ரீதியாகவும் பணிகள் முன்னெடுக்கப் பட வேண்டும்.

எமது நாட்டில் பல வேலைநிறுத்தப் போராட்டங்கள் பல துறை களிலும் நடைபெற்றுள்ளன. 1953 ஆகஸ்ட் 15ஆம் திகதி வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு எதிராக நடைபெற்ற நாடு தழுவிய ஹர்த்தால் போராட்டத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்கள் முக்கியமாக இருந்தன. அந்த ஹர்த்தால் போராட்டத்தினால் அன்றைய அரசாங்க அமைச்சரவை கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியில் நங்கூரமிடப்பட்ட கப்பலிலேயே நடைபெற்றது. அது முழுமையான அரசியல் மயப்படுத்தப்படாதபடியால் அது அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி நகரவில்லை. புரட்சிகர மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியொன்றின் வேலைத் திட்டமும் வழிகாட்டலும் இல்லாதபடியால், அது தொழிலாளர் வர்க்கப் புரட்சிக்கு அடிகோலவில்லை.

அதே போன்று, பெருந்தோட்டத் துறையிலும் அரச துறையிலும் பாரிய தொழிற்சங்கப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. 1980ம் ஆண்டு ஜூலை மாதம் அரசதுறை, தனியார்துறைத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனை அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மூர்க்கத்தனமாக அடக்கி ஒடுக்கியது. பொலிஸ், இராணுவ, சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பால் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை வேலையி

லிருந்து நீக்கியது. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அதனால் அத் தொழிலாளர்களும் தொழிற்சங்க இயக்கமும் பலவீனப்பட நேர்ந்தது. வேலையிழந்த தொழிலாளர்களிற் பலர் இருப்பிற்கு வழியின்றித் தற்கொலை செய்து கொண்டனர். பின்னர் (1988 காலகட்டத்தில் ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது) வேலையிழந்தவர்களிற் சிறுதொகையினர் மீள வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இப் போராட்டத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இறங்கவும் இல்லை, ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும் இல்லை. அதற்கு, 1980ஆம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த ட்ரொட்ஸ்கிய தொழிற்சங்கத் தலைமைகளின் தவறுகள் ஒருபுறமும், மறுபுறத்தில் பெருந்தோட்டத் துறையில் பெரிய தொழிற்சங்கங்களாக இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் இணைந்திருந்தமையும் காரணமாகும்.

தொழிற்சங்கப் போராட்டங்கள் யாவும் பொருளாதாரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகளுக்கும் சீர்திருத்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களுக்குச் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கும், சந்தர்ப்பவாதத்திற்கும் வரையறுக்கப்பட்டனவாகவே இருந்தன. தொழிற்சங்கங்கள் பாராளுமன்ற அதிகாரத்தை நோக்காகக் கொண்ட கட்சிகளின் விரிவாக்கமாகவோ புரட்சிகர அரசியலிலிருந்து பிரிக்கப்பட்ட தொழிற்சங்கவாதத்தை அடிப்படையாகக் கொண்டனவாகவோ தான் இருக்கின்றன.

அதற்கு மாறாகப் புரட்சிகர அரசியலை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களை அணிதிரட்டும் நோக்கில் பாட்டாளிவர்க்க புதிய ஜனநாயக சங்கம் தனியார் துறைத் தொழிலாளர்கள் மத்தியிற் செயற்பட்டாலும் அதன் செயற்பாடு போதியளவு விரிவடையவில்லை. அதே போன்று ஆசிரியர் சங்கத்தையும் வேறு அரச தொழிலாளர்களுக்கான சங்கங்களையும் அமைக்கும் முயற்சிகளும் ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன.

தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்த கடந்த 30 வருடங்களிற்கு மேலாக, அரசு முன்னெடுத்த இன அடக்குமுறைகளாலும் இராணுவ நடவடிக்கைகளாலும், அதற்கு எதிரான நடவடிக்கைகளாலும் தமிழர் தரப்பு அரசியல்-இராணுவ நடவடிக்கைகளாலும் சிங்கள-தமிழ் தொழிலாளர்களிடையே இனரீதியான பிளவுகள் அதிகரித்தன. யுத்தத்திற்கு எதிராகச் சிங்கள மக்கள் மத்தியில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பயங்கரவாதத்திற்கு ஆதரவான நடவடிக்கைக

ளாகப் பேரினவாதச் சக்திகளால் முத்திரை குத்தப் பட்டதால் அவை தனிமைப்படுத்தப்பட்டன. யுத்தத்தை எதிர்த்துத், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுத்த சிங்கள இடதுசாரித் தொழிற் சங்கத் தலைவர்கள் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கடடவிழ்த்து விடப்பட்டன. பலர் பல ஆண்டுகளாக அவசரகால, பயங்கரவாதத் தடைச் சட்டங் களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இன்னும் பலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எமது கட்சியின் அங்கத்தவர்களான தோழர்கள் வெ. மகேந்திரன், இரா. ஜெயசீலன், ச. மோகன், ச. சுகேசனன், சி. கிருஷ்ணப்பிரியன் ஆகியோர் 2006ஆம் ஆண்டு பெப்ரவரியில் அவசரகாலச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் வெ. மகேந்திரன், சி. கிருஷ்ணப்பிரியன், ச. மோகன் ஆகியோர் 2009 பெப்ரவரியிலும், இரா. ஜெயசீலன் 2010 ஜனவரியிலும் எதுவித குற்றச்சாட்டுமின்றி விடுவிக்கப்பட்டனர். தோழர் சுகேசனன் தொடர்ந்து எவ்வித நீதி விசாரணையுமின்றி இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் தோழர் பிரதீபன் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் தோழர் செல்வம் கதிர்காமநாதன் அடிக்கடி இராணுவ விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தார். இன்னமும் இராணுவ முகாமிற்குச் சென்று கையெழுத்திட்டு வருகிறார். அதைவிடக் கட்சி யின் தலைமைத் தோழர்களில் சிலர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி யுள்ளனர்.

எமது கட்சித் தோழர்கள் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பாலமாகச் செயற்பட்டதுடன் சிங்கள மக்கள் மத்தியிலும் பல வெகு ஜனப் போராட்டங்களை முன்னெடுத்தும் வந்தனர். சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர அரசியலை முன்னெடுக்கும் நோக்கிலும் புரட்சி கரக் கட்சியைக் கட்டும் நோக்கிலும் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான ஐக்கியத்திற்கு எதிராக இருக்கும் அரசும் பேரினவாதச் சக்திகளும் பல விதத்திலும் எமது கட்சித் தோழர்களுக்குத் தடையாக இருந்து வருகின்றனர். எமது மேற்படி தோழர்கள் கைது செய்யப் பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமைக்குக் முக்கிய காரணம் எமது தோழர் கள் சிங்கள-தமிழ் மக்களின் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளை எடுக் கின்றமையே ஆகும்.

எமது தோழர்கள் ஜப்பான் ஏகாதிபத்தியத்தின் நிதியுதவியுடன் மேற் கொள்ளப்பட்டுவரும் மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து இயக் கத்தை முன்னெடுத்த போது பெரும்பான்மை இனக் காடையர்களி

னால் திட்டமிட்ட வகையில் தாக்கப்பட்டனர். அத் திட்டத்திற்கு எதிரான போராட்டம் இனவாத ரீதியாக அணுகப்பட்டு முறியடிக்கப்பட்டது.

இந்தியா மேற்கொள்ளும் சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து எம்மால் நடத்தப்பட்ட போராட்டம் 'தமிழ்ப் பயங்கரவாதத்திற்கு' ஆதரவான போராட்டமாகக் காட்டப்பட்டது.

இவ்வாறு யுத்தத்தைக் காட்டித் தொழிலாளர்களின் நியாயமான போராட்டங்களை அரசு நசுக்கி அவர்களின் நியாயமாக கோரிக்கைகளையும் மறுத்தே வந்தது. அதற்கெதிராகத் தொழிலாளர் வர்க்க ஐக்கியம் கட்டப்படுவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் இயங்கும் இடதுசாரிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ட்ரொட்ஸ்கிய அடிப்படைகளைக் கொண்டதாக இருப்பதுடன், என்.ஜீ.ஓ. நடவடிக்கைகளினாலும் பின் நவீனத்துவச் சிந்தனைகளாலும் உள்வாங்கப்பட்டனவாக இருக்கின்றன. இதனாற் புரட்சிகர அரசியல் பின்னிடைவுகளைக் கண்டுள்ளது. அத்துடன் அவர்களிடம் பரவலாகக் காணப்படும் பேரின மேலாதிக்கக் கருத்தியலும் தொழிலாளர்களாக இருப்பவர்களிடம் எஞ்சியிருக்கும் நிலப் பிரபுத்துவப் பண்பாடு போன்றவையும் பின்னிடைவுகளுக்குக் காரணங்களாம்.

தேசிய இனப் பிரச்சினையில் சந்தர்ப்பவாத இடதுசாரிகள் விட்ட தவறுகள் காரணமாகவும், தமிழ் மக்கள் மத்தியில் திட்டமிட்டுத் தமிழப் பழைமைவாதிகளால் பரப்பப்பட்ட குறுந்தேசியவாதக் கருத்துக்கள், இடதுசாரி விரோதக் கருத்துக்கள் (சீனாவிற்கு எதிரான கருத்துக்களும் சீனா சோஷலிஸ நாடாக இருந்த போது முன்னெடுக்கப்பட்ட சீன விரோத இந்திய ஆதரவு நிலைப்பாடுளும் இன்றும் தேசிய இனப் பிரச்சினையில் இலங்கை அரசின் பக்கம் சீனா இருப்பதாகப் பரப்பப்படும் கருத்துக்களும் தொழிலாளர் வர்க்க அரசியலுக்கு எதிரான கருத்துக்களும்) சாதியம் போன்றனவும் தமிழ் மக்கள் மத்தியில் தொழிலாளர் வர்க்க அரசியல் வளராமைக்குப் பிரதான காரணங்களாகும்.

முஸ்லிம் மக்களிடையே வளர்க்கப்பட்டுள்ள குறுகிய தேசியவாதத்தையும் அவர்களிடம் செல்வாக்குச் செலுத்தும் இஸ்லாம் மதத்தை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைவாதச் செயற்பாடுகளையும் புரட்சிகர அரசியலுக்கு மாறானவையாக அடையாளங் காண முடியும்.

அனைத்து இனத் தொழிலாளர்களை வர்க்கரீதியாக ஐக்கியப் படுத்தும் புரட்சிகரத் தொழிற்சங்க இயக்கம் கட்டி வளர்க்கப்பட வேண்டும். சமூகரீதியாக தொழிற் பிரிப்பினாலும் இனவாதத்தினாலும் பிரிக்கப்பட்

டுள்ள தொழிலாளர்களிடையே தொழிலாளர் வர்க்க ஒத்துழைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து ஐக்கியத்தைக் கட்ட வேண்டும்.

தொழிலாளர்களின் உடனடிக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களினூடாக அரசியல்ரீதியாகத் தொழிலாளர்களுக்கு விழிப்பூட்டி ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டி அவர்களைத் தொழிலாளர் வர்க்கப் புரட்சியின் தலைமைச் சக்திகளாக வளர்க்கக் கட்சி உரிய செயற்திட்டங்களுடன் செயற்பட வேண்டும். உழைக்கும் மக்கள் அனைவரையும் தொழிலாளர்கள் என்ற அடையாளத்திற்குள் கொண்டு வருவதுடன் அவர்கள் அனைத்துப் போராட்டங்களிடையேயும் ஒத்துழைப்பை உறுதி செய்து தொழிலாளர் வர்க்கப் புரட்சியை நோக்கி முன்னேற வேண்டும்.

**புரட்சிக்காகத் தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுத்தப்பட வேண்டிய விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும்**

சமூக மாற்றத்திற்கான புரட்சியில் தலைமைச் சக்தியாகத் தொழிலாளர் வர்க்கமும் பிரதான சக்தியாக விவசாயத் தொழிலாளர்களும் காணியில்லாத கூலி விவசாயிகளும் ஒரே தரப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

விவசாயத் தொழிலாளர்களும் காணியில்லாத கூலி விவசாயிகளும் ஏழை விவசாயிகளும் எண்ணிக்கையிற் பெரும்பான்மையினராவர். அவர்கள் இலங்கையில் தற்போது நிலவும் உற்பத்தி உறவில் மிகவும் சுரண்டப்படுபவர்களாவர். அவர்கள் பெரிய நிலவுடைமையாளர்களாலும் பெரும் வர்த்தகர்களாலும் பல்தேசியக் கம்பனிகளாலும் சுரண்டப்படுகின்றனர்.

இலங்கையின் உற்பத்தி அளவில் ஏறக்குறைய 70 சதவீதமானவர்கள் விவசாயத்திலேயே (உணவு, உப உணவு, கால்நடை வளர்ப்பு போன்றனவற்றில்) தங்கி வாழ்கின்றனர். இலங்கையின் தென் பகுதியில் விளையும் உணவு வகைகளும் பழ வகைகளும் முழு ஆசியாவிற்கும் போதுமானவை என்று 1818ஆம் ஆண்டு ஊவா வெல்லச விவசாயிகளின் கிளர்ச்சியின் பின்னர் ஆங்கிலேய அதிகாரி ஒருவர் அன்றைய ஆங்கிலேய ஆளுநருக்கு எழுதிய அறிக்கையிற் குறிப்பிட்டிருந்தார். அது எந்தளவிற்குச் சரி என்பதைவிட உணவுத் தேவையில் அன்றைய இலங்கை தன்னிறைவாக இருந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவ்வறிக்கையைச் சான்றாக்கிக் கொள்ள முடியும்.

பிரித்தானிய கொலனித்துவ காலத்தில் இலங்கையின் உணவுப் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படவில்லை. இலங்கை விவசாயிகளின் காணிகளைப் பெருமளவில் பிரித்தானியர் சுவீகரித்துக் கொண்டனர்.

மத்திய மலைநாட்டில் தேயிலை, றப்பர் பெருந்தோட்டங்களைச் செய்வதற்காகவும், பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காகவும் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களா லேயே தமது காணிகள் பறிபோனதென்ற தவறான கருத்து பெரும் பாலான சிங்கள விவசாயிகள் மத்தியில் இன்றும் இருந்து வருகிறது. மத்திய மலைநாட்டில் உயரமான பகுதியிலுள்ள காட்டு நிலங்கள் அழிக்கப்பட்டே பெருந்தோட்டங்கள் செய்யப்பட்டன. சிங்கள விவசாயி களின் நெல், சேனைக் காணிகள் அதில் உள்ளடங்கவில்லை. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின்றிப் பிரித்தானிய கொலனித்துவ வாதிகளே சிங்கள விவசாயிகளின் காணிகளைப் பறித்தனர். பெருந் தோட்டத் தொழிலாளர்கள் சிங்களக் கிராமவாசிகளுடன் தொடர்பற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். பெருந்தோட்ட வேலைகளுக்குச் சிங்களவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவும் இல்லை. சிங்களவர்கள் சேர்ந்து கொள்ள ஆர்வம் காட்டவுமில்லை. சிங்களவர்கள் மத்தியில் பிரித்தானிய கொலனித்துவவாதிகளைவிட, தோட்டத் தொழிலாளர் களுக்கு (மலையகத் தமிழர்கள்) எதிரான கருத்துக்கள் திட்டமிட்ட வகையில் சிங்கள இனவாதிகளால் பரப்பப்பட்டன. இதனால் பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சிங்கள கிராமவாசிகளுக்கும் வர லாற்று ரீதியாகப் பகைமை வளரலாயிற்று. பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறியதும் அக் காணிகளின் பெரும் பகுதி சிங்கள நிலப் பிரபுக்களின் கைகளுக்கு மாறியது எனலாம்.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு அரசினால் தோட்டக் காணிகளில் திட்டமிட்ட பேரினக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுக் குடியேற்றங்களுக்குக் கிராம உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப் பட்டன. இந்தத் திட்டமிட்ட குடியேற்றங்களினால் பெருந்தோட்ட உற்பத்தி பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்ததுடன், நடுத்தெருவில் விடப்பட்டனர். அத்துடன் திட்டமிட்ட குடி யேற்றங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கும் பெருந் தோட்டத் (தமிழ்த்) தொழிலாளர்களுக்கும் இனரீதியான முரண்பாடுகள் அதிகரித் தன. இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, பதுளை மாவட்டங் களில் தோட்டத் தொழிலாளர்கள் இனரீதியாக அடிக்கடி தாக்குதல்கட் குள்ளாவதுண்டு. பேரினவாத அரசியல்வாதிகளின் அனுசரணையும் இவற்றுக்கு உண்டு. தோட்டத் தொழிலாளர்கள் இன்னும் லயின் அறைகளிலும், சிறிய இரட்டை வீடுகளிலும் சில இடங்களில் அண்மை யில் கட்டப்பட்ட தொடர் மாடிவீடுகளிலும் வாழ்ந்தாலும் அவர்களின் குடியிருப்புகள் இன்னும் கிராமக் கட்டமைப்பிற்குள் கொண்டு வரப்

படவில்லை. உள்ளூராட்சி சபைகளினதோ, மாகாண சபைகளினதோ நிர்வாகத்திற்குள் அடக்கப்படாமலே தோட்டக் குடியிருப்புக்கள் இருக் கின்றன. 1948ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டமும் 1956 சிங்களம் மட்டுமே ஆட்சி மொழிச் சட்டமும் கொண்டு வரப்பட்டபோது அவற்றை இடதுசாரித் தலைவர்கள் எதிர்த்ததுடன் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இடதுசாரித் தொழிற் சங்கங்கள் பலமாக இருந்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் 1960, 1970களில் ட்ரொட்ஸ்கி வாதிகளும் திரிபுவாதிகளும் இணைந்துகொண்டதை அடுத்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இன ஒடுக்கல்களுக்குச் சிலவேளைகளில் சப்பைக்கட்டுக் கட்டினர். சிலவேளைகளில் மௌனமாக இருந்து ஆதரவளித்தனர். அத்துடன் இடதுசாரிகள் என்று அடையாளம் காட்டிக் கொண்ட ஜே.வி.பி. தனது 1971ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு அடிப்படை யான வகுப்புகளில் 5வது வகுப்பில் தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கரங்களாகக் காட்டியதுடன் அவர்க ளுக்கு எதிரான உணர்வையும் வளர்த்தது. இதனால் அரைவாசி தொழிற்சாலைத் தொழிலாளர்களாகவும் அரைவாசி விவசாயத் தொழி லாளர்களாகவும் இருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் சிங்கள விவசாயிகள், தொழிலாளர்களுக்குமிடையே இடைவெளி அதிகரித்தது.

அதே போன்று, 1930களில் துறைமுகம், புகையிரதச் சேவை போன்ற துறைகளில் அதிகமாக வேலை செய்த இந்திய வம்சாவழித் தொழிலாளர்களுக்கு எதிராகச் சிங்களத் தொழிலாளர்கள் மத்தியில் பகைமை வளர்க்கப்பட்டது. இப் பகைமை (ஒரு காலத்தில் இடதுசாரி என்றழைக்கப்பட்ட) ஏ.ஈ. குணசிங்க என்ற தொழிற்சங்கத் தலைவரின் தலைமையில் “இந்தியத் தொழிலாளர்களே வெளியேறுக” என்ற கோஷத்துடன் இயக்கமாக்கப்பட்டது.

1940களுக்குப் பிறகு கிழக்கு மாகாணத்தில் (கல்லோயா, கந்த ளாய் போன்ற பகுதிகளில்) ஏற்படுத்தப்பட்ட விவசாயக் குடியேற்றங் களில் சிங்கள விவசாயிகள் மட்டுமே குடியேற்றப்பட்டனர். அதே போன்று வடக்கு-கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட மீனவக் குடியேற்றங் களிலும் சிங்களவர்களே குடியேற்றப்பட்டனர். இதனால் அப் பிரதேசத் தமிழ் விவசாயிகளும், மீனவர்களும் புறக்கணிக்கப்பட்டு இனரீதியான ஒடுக்கல்களுக்குள்ளாகினர். அக் குடியேற்றங்கள் தமிழ்ப் பிரதேசம் என்றொன்று இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் முன்னெடுக்கப் பட்ட பேரினவாதக் குடியேற்றங்களாகும்.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் தமிழ் விவசாயிகளுக்கும் சிங்கள விவசாயிகளுக்குமான இடைவெளி அதிகரித்து வந்துள்ளது. சிங்களத் தொழிலாளர்களுக்கும் தமிழ்த் தொழிலாளர்களுக்குமிடையி

லுமான இடைவெளியும் அதிகரித்துள்ளது. தேசிய இனப் பிரச்சினை யுத்தமாக வளர்ச்சியடைந்த பின்னணியிலும் உழைக்கும் மக்களின் ஐக்கியம் குலைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உணவு உற்பத்தி, மீன்பிடி போன்றவை நவதாராள வாதப் பொருளாதாரத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம் போன்ற வற்றின் நிகழ்ச்சிநிரலின்படி விவசாயத்திற்கு அரசாங்கம் வழங்கி வந்த மானியங்களும் சலுகைகளும் குறைக்கப்பட்டன. உணவுப் பயிர்ச் செய்கையை விட ஏற்றுமதி செய்யக்கூடிய பழவகைகள், காய்கறிகள் பயிரிடப்பட்டன. கிராமங்களிலுள்ளோருக்கு நகரங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் திட்டங்களை வகுக்கும்படி இலங்கை அரசாங்கங்கள் தொடர்ந்து உலக வங்கி போன்றவற்றினால் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளன. அதன்படி 2003 ஆம் ஆண்டிற்குப் பிறகு கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி வந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட உணவு, விவசாயச் செய்கை வீழ்ச்சியடைந்தது. பல்தேசியக் கம்பனிகள் விவசாயத் துறையில் ஆதிக்கம் செலுத்தலாயிற்று.

காணியற்றவர்களுக்குக் காணி, வீடற்றவர்களுக்கு வீடு போன்ற சுலோகங்களின் அடிப்படையில் எவ்வித வெகுஜனப் போராட்டங்களும் இலங்கை வரலாற்றில் இடம்பெறவில்லை. குறிப்பிடத்தக்கவாறு விவ சாய எழுச்சிகளும் இடம்பெறவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்த 1956 முதல் 1960 வரையும், 1960 முதல் 1965 வரையும், 1970 முதல் 1977 வரையுமான காலங்களில் அதிலிருந்த தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினரும் அவர்களோடு இணைந்திருந்த இடதுசாரிகளும் (திரிபுவாதிகள், ட்ரொட்ஸ்கிவாதிகள்) தொழிலாளர்கள் உரிமைகள் தொடர்பாகவும் (தொழிற் சட்டப் பாதுகாப்புகள்) விவசாயி களின் உரிமைகள் தொடர்பாகவும் சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதிற் குறிப்பிடத்தக்கது காணிச் சீர்திருத்தம். அதனூடாகக் காணியற்ற அனைவருக்கும் காணி கிடைத்தது என்று கூற முடியாது. ஆனால் ஒருவர் 50 ஏக்கருக்கு மேல் காணி வைத்தி ருக்க முடியாதெனக் காணி உச்சவரம்பு கொண்டுவரப்பட்டது. அந்த அடிப்படையில் 50 ஏக்கருக்கு மேல் ஒருவரிடம் இருந்த காணிகள் அரச உடைமையாக்கப்பட்டன. (1991இல் பெருந்தோட்டங்கள் நீண்ட காலக் குத்தகை உடன்படிக்கையின்படி தனியார் கம்பனிகளிடம் கைய ளிக்கப் பட்டன). இவ்வாறு அரச உடைமையாக்கப்பட்ட காணிகளில் சிறுபகுதி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒருவருக்கு அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் பட்டது. சில இடங்களில் விவசாயச் செய்கைக்கு 5 ஏக்கர் வரை காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

காணி உச்சவரம்பு கொண்டு வரப்பட்ட போதும், குடும்ப அங்கத் தவர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ஏக்கர் உடைமை கோர முடியும் என்பதால் மீண்டும் பெரியளவில் காணிகளை ஒரு சில குடும்பங்கள் தொடர்ந்து வைத்திருக்கும் நிலை ஏற்பட்டது. அத்துடன் கம்பனிகள் உச்சவரம்பின்றிக் காணிகளை வைத்திருக்க முடியும் என்பதால் கம்ப னிகளின் பெயரிலும் ஒரு சில காணிகளைத் தொடர்ந்து வைத்தி ருக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் பழைய நிலவுடைமையாளர்கள் வேறு விதத்தில் தொடர்ந்தும் நிலவுடைமையாளர்களாக இருக்கும் நிலை ஏற்பட்டது.

குடியிருப்பிற்காகவும் விவசாய செய்கைக்காகவும் காணிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அனைவருக்குமே ஏற்கெனவே காணிகள் இருக்கவில்லை என்றும் கூறமுடியாது. ஏற்கெனவே காணிகளை வைத் திருந்தவர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு காணி களைப் பெற்றுக் கொண்டவர்களினூடாக விவசாய எழுச்சி ஏற்படுவ தற்கு மாறாக அவர்கள் சிறு காணி உடைமையாளர்களாக மாறி, நிலவி வந்த நிலவுடைமை முறைமையைப் பாதுகாக்கும் வகையி லேயே செயற்படலாயினர்.

காணியற்றவர்களுக்குக் காணி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையானது, புதுவகைச் சிறுகாணி உடைமை யாளர்களை உருவாக்குவதல்ல. மாறாக, நிலப்பிரபுத்துவத்தைச் சிதைத்து, விவசாயத் துறையை ஜனநாயகப்படுத்தி விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் புரட்சிகரச் சக்திகளாக்கிச், சமூக மாற்றத்திற்கான வர்க்கப் புரட்சியின் பிரதான சக்தியாக்குவதே அடிப் படையாகும்.

1960களில் அறிமுகம் செய்யப்பட்ட உலகளாவிய ரீதியிலான ‘பசு மைப் புரட்சி’ என்ற பெயரிலான நடைமுறைகள் (இரசாயனப் பசளை, கிருமிநாசினி. இயந்திரங்கள் பாவிப்பு) இலங்கையின் விவசாயத் துறை யை வெகுவாகப் பாதித்தன. இதனால் நவகொலனித்துவப் பிடிகள் இறுகின.

1990களில் இரண்டாவது பசுமைப் புரட்சி என்ற பேரில் விவசாயத் துறையில் பல்தேசியக் கம்பனிகளின் செல்வாக்கு அதிகரித்தது. இலங்கை நெல்லுற்பத்தியில் 1970களின் பிற்பகுதியில் தன்னிறைவைக் கண்டிருந்தது. ஆனால் இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்யப் படுகிறது. நெல்லுற்பத்தியிலும் அரிசியாக்கலிலும் நவீன இயந்திரங்கள் அறிமுகமாகி இருந்த போதும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையே தொடர்கிறது. நெல்/அரிசி சந்தைப்படுத்தலைத் தனிப்பட்ட இருவரே கட்டுப்படுத்துகின்றனர். அதில் மத்தியப்படுத்தப்பட்ட சந்தையோ விநி யோக முறையோ ஏற்படுத்தப்படவில்லை.

எனவே விவசாயம் செய்வதற்கெனக் காணியற்றவர்களுக்கு 5 தொடக்கம் 10 ஏக்கர் வரை பகிர்ந்தளிக்கப்பட்டுக் கூட்டுப் பண்ணை முறையில் உற்பத்தி, விநியோகம் போன்றன மேற்கொள்ளப்பட வேண்டும். நிலப்பிரபுத்துவத்தினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் ஏகாதிபத்தியத்தினதும் பிடியிலிருந்து விவசாயத் துறை முற்றாக விடுவிக்கப்பட வேண்டும். அதனூடாக வறுமை, உணவுப் பற்றாக்குறை, பஞ்சம், போஷாக்கின்மை, சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

விவசாயப் புரட்சியை ஏற்படுத்த, வலுவான விவசாயிகள் சங்கம் கட்டப்பட வேண்டும். விவசாயிகளின் உரிமைப் போராட்டங்களை முன்னெடுப்பதுடன் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக விவசாயிகளின் குறிப்பான போராட்டங்களுக்காகப் பரந்துபட்ட ஒத்துழைப்பு இயக்கங்களை முன்னெடுத்து விவசாயத் தொழிலாளர்களதும் விவசாயிகளினதும் பரந்துபட்ட ஐக்கியம் கட்டப்பட வேண்டும்.

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தற்போது என்.ஜி.ஓக்களே கையாள்கின்றன. (இலங்கையில் மக்கள் இயக்கங்கள், நலன்புரி அமைப்புகள் போன்றன என்.ஜி.ஓக்களாகவே பதிவு செய்யப்படுகின்றன. இதிற் சில அமைப்புக்களும் என்.ஜி.ஓக்களில் வேலை செய்யும் சில தனிநபர்களும் சமூக சிரத்தையுடன் செயற்படுவதை மறுப்பதற்கில்லை). பொதுவாக என்.ஜி.ஓக்கள் ‘பேண்தகு உற்பத்தி’, அபிவிருத்தி, மாற்று உற்பத்தி போன்ற கோட்பாடுகளுடன் நவ கொலனித்துவப் பிடிக்கு எதிராகவன்றி அதற்குச் சார்பாகச் செயற் படுகின்றன. பல வெளிநாட்டு, உள்நாட்டு என்.ஜி.ஓக்கள் ஏகாதிபத்தியத்தின் நேரடி அல்லது மறைமுக முகவர்களாகவே செயற்படுகின்றன. அவற்றின் பிடியிலிருந்தும் விவசாயிகள் விடுவிக்கப்பட்டுப் புரட்சிகர வெகுஜனப் பாதையில் அணிதிரட்டப்பட வேண்டும்.

மீனவர்களதும் கடற்றொழிலாளர்களதும் பிரச்சினைகளும் பிரத்தியேகமாக ஆராயப்பட்டுப் பெரிய சம்மாட்டிமார்களினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் பிடியிலிருந்தும் மீன்பிடித்துறை விடுவிக்கப்படக் கடற்றொழிலாளர்களும் புரட்சியின் பங்குதாரர்களாக்கப்படத் திட்டமிட்ட வேலைகள் அவசியமாகின்றன.

**சாதியத்திற்கு எதிரான போராட்டம்**

இலங்கையின் புரட்சிகர கம்யூனிஸ்ட்டுகள் சாதியத்திற்கு எதிராக வட மாகாணத்தில் (தமிழ் மக்கள் மத்தியில்) 1960களில் முன்னெடுத்த தீண்டாமைக்கு எதிரான போராட்டம் மிகவும் முக்கியமானதாகும். வெகுஜனப் போராட்டங்களுடன் ஆயுத நடவடிக்கைகளும் அப் போராட்டத்தில் இடம்பெற்றுள்ளன. இதனால் வடக்கில் பொது இடங்

களில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது. தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக்க நடவடிக்கைகளுக்கும் சாதியத்திற்கு எதிரான கருத்தியல் போராட்டங்களுக்கும் (சண்முகதாசன் தலைமையிலான) இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி வழிகாட்டியது எனலாம். அப் போராட்டம் சாதிய அடையாளத்தை வலியுறுத்தித் தாழ்த்தப்பட்ட சாதி யினருக்குச் சலுகை அடிப்படையிலான இட ஒதுக்கீடுகளைக் கோராது, சாதியத்தைத் தகர்த்துச் சமத்துவத்தை வலியுறுத்தியது. இந்தியாவில் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களிற் போன்று தாழ்த்தப்பட்ட சாதி யினருக்கு விசேட சலுகைகளைக் கேட்டுச் சாதிய அடையாளத்தை நிலைநிறுத்தும் வகையிலான போராட்டங்களை முன்னெடுக்கும் தேவை இலங்கையில் இருக்கவில்லை.

தீண்டாமை அடங்கி இருந்தாலும் சாதிய ஆதிக்கம் எல்லாத் தேசிய இனங்கள் மத்தியிலும் இருக்கின்றது. உற்பத்தி உறவுகளில் பெரிதாகத் தற்போது இல்லாவிட்டாலும் பண்பாட்டு ரீதியிலும் அரசி யலிலும் சாதியம் நிலைகொண்டுள்ளது. சில குறுகிய சாதியவாதி களும், பின்நவீனத்துவவாதிகளும் சாதியத்தைத் தனியாகப் பிரித்து, அதனுடைய அரசியல்-பொருளாதார-சமூக-பண்பாட்டுத் தளத்தை வெறும் சாதி அடையாள அடிப்படையிலானதென்ற கருத்து முதல்வாத நிலைப்பாட்டில் அதனை அணுகுகின்றனர்.

சாதிய ஆதிக்கத்திற்கும் குறுகிய சாதிவாதத்திற்கும் எதிரான போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசிய மாகும். ஏனெனில் சாதியம் மக்களின் ஐக்கியத்தைக் குலைக்கும் நிலப்பிரபுத்துவக் கருத்தியலாகும்.

வர்க்கப் புரட்சி சாதியத்தை இல்லாமற் செய்துவிடும் என்ற யாந்தி ரிக நிலைப்பாட்டை எடுக்காது வர்க்கப் போராட்டத்திற்கும் சாதியத் திற்கு எதிரான போராட்டத்திற்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பைப் பேண வேண்டும். பொருளாதாரத்திலான போராட்டமும் மேல் கட்டு மானத்திலான போராட்டமும் ஒருங்கிணைப்புடன் சமாந்தரமாக முன் னெடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வோமாயின் எல்லா அடக்குமுறைகட்கும் ஒடுக்குதல்கட்கும் எதிரான போராட்டங்களினூ டாகப் புரட்சிகரமான சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை முன்னெ டுக்க முடியும். இதுவே போராட்டங்களுக்கு இடையிலான இயக்கங் களின் உறவுநிலை ஆகும்.

தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் சாதியத்திற்கு எதிரான போராட்டம், பெண்ணொடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் போன்றன, வர்க்கப் போராட்டத்தின் பகுதி என்று சொல்லுவதன் அர்த் தம் அப் போராட்டங்களின் அவசியத்தை மறுப்பதல்ல. அதே போன்று, அப் போராட்டங்களும் வர்க்கப் போராட்டத்தை மறுக்க இயலாது.

சாதியத்திற்கு எதிராகவும் தீண்டாமையின் மிச்சசொச்சங்கட்கு எதிராகவும் திட்டவட்டமான வேலைத் திட்டங்கள் பலமுனைகளிலும் எடுக்கப் பட வேண்டும்.

**பெண் விடுதலை**

குடும்பங்களில் பெண்கள் ஆண்களின் தனிச் சொத்தாகக் கொள்ளப் பட்டு ஆணாதிக்கம் நிலைநாட்டப்படுகிறது. பெண்களே வரலாற்றில் முதலாவது தனிச் சொத்தாகக் கொள்ளப்பட்டுள்ளனர். இதனூடாகத் தனிச்சொத்துடமை வளர்ந்த வரலாற்றையும் நாம் காணமுடியும். இதன் விருத்தியாகவே தனிச் சொத்தைப் பாதுகாக்கும் அரசு தோன்றியுள் ளது. எனவே தனிச் சொத்துடமைக்கு எதிரான போராட்டம் பெண் விடுதலைக்கான போராட்டமாகவும் இருப்பதுடன் பெண்ணொடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் தனிச் சொத்துடமைக்கு எதிரான போராட்டமாகவும் இருக்கும். பெண்ணொடுக்குமுறையின் இந்த அடிப் படையை மாக்சிசமே விளக்கியது. அது தவிர்ந்த எல்லா விளக் கங்களும் கற்பனாவாத விளக்கங்களாகும்.

ஆணாதிக்கத்திற்கு எதிர் பெண்ணாதிக்கம் என்றன்றிப், பெண் விடுதலை என்பதே பொருத்தமானதாகும். கருத்தியல் ரீதியாகப் பெண் விடுதலைச் சிந்தனை நிலைநிறுத்தப்பட வேண்டும்.

பெண் விடுதலைப் போராட்டத்தை வெறும் அடையாளப் பிரச்சினை யாகவன்றி வர்க்கப் போராடடத்தின் பகுதியாகவும், அதே வேளை குறிப்பாகவும் இரண்டு தளங்களிலும் சமாந்தரமாக முன்னெடுக்க வேண்டும். சனத்தொகையில் 50% ஆக இருக்கும் பெண்களின் சுதந் திரம் வேண்டிய போராட்டங்கள் பல முனைகளிலும் முன்னெடுக்கப் படுவதுடன் பெண்கள் அமைப்புகள் பிரத்தியேகமாகக் கட்டப்படுவதும், கட்சியின் கீழ்ப் பெண்கள் அணி திரட்டப்படுவதும் அவசியம்.

**மாணவர்களும் இளவயதினரும்**

மாணவர் அமைப்பும், இளைஞர் அமைப்பும் வலுவாகக் கட்டியமைக் கப்பட வேண்டும். ஏனெனில் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்புப் போன்ற அடிப்படைத் தேவைகளை மிகவும் விரிவாக்க வேண்டி நிற்கும் சமூகத்தின் பெரிய பகுதியினர் மாணவர்களும், இளம் வயதி னருமாவர். அவர்களின் கோரிக்கைகள் பலவகைகளில் முதலாளித் துவ அமைப்பை கேள்விக்குட்படுத்துவனவாகும். அவர்களின் தேவை களை மறுக்கும் வகையிலேயே நவகொலனித்துவ செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏகாதிபத்தியப் பூகோளமயமாதல் மாணவர் களினதும் இளவயதினரதும் ஆளுமையைச் சிதைப்பதாக இருக்கிறது.

இவற்றால் மாணவர்களும் இளவயதினரும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பரந்துபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்திலும் சமூக மாற்றத்திற்கான வர்க்கப் புரட்சியிலும் மாணவர்களினதும் இளவயதினர்களினதும் பங்களிப்பு மிக இன்றியமையாதது.

அவர்களைக் கட்சிக்குள்ளும் வெளியிலும் அரசியல்ரீதியாக அணிதிரட்டும் பொறுப்பைக் கட்சி எடுக்க வேண்டும்.

**கல்வியும் சமூக நலன்களும்**

பூகோளமயமாக்கலுக்கு ஏற்ற வகையில் எமது கல்வி முறை மாற்றியமைக்கப்பட்டு மாணவர்களும் மக்களும் சுயாதீனமாகச் சிந்திக்க இயலாது போகுமாறு நெறிப்படுத்தப்படுகின்றனர். இதற்கு மாறாக, எல்லாருக்குமான கல்வி, எமக்கேற்ற கல்வி என்பதன் அடிப்படையில் இலவசக் கல்வியும் தாய்மொழிக் கல்வியும் உறுதிசெய்யப்படல் வேண்டும். அதற்கு மாணவர்களின் விழிப்புணர்வு மிக முக்கியம்.

சுகாதாரம் வியாபாரமயமாக்கப்பட்டுத், திட்டமிட்ட வகையில் ஆபத்தான நோய்களும் பரப்பப்பட்டு வருகின்றன. மக்களின் உணவு உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தகவல்-தொடர்பாடல் போன்றவற்றுக்கு அரசே பொறுப்பாகும். அவற்றிற் செலவுக் குறைப்பிற்கு இடமிருக்க முடியாது. கடனுதவி வழங்குபவர்கள் எங்கள் தலைவிதியைத் தீர்மானிக்க இடமளிக்கலாகாது.

**ஐக்கிய முன்னணியும் ஒத்துழைப்பு இயக்கமும்**

தனியொரு கட்சி பலமாக இருந்தாலும் புரட்சியிலும் புரட்சிக்கு முன்னைய அனைத்துப் போராட்டங்களிலும் பிற அமைப்புகளுடனும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது. பொருளாதார அடித்தளம் தொடர்பான போராட்டங்களிலும் மேற்கட்டுமானம் தொடர்பான போராட்டங்களிலும் அனைத்துத் தளங்களிலும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டியது அவசியம். முரண்பாடுடைய ஏனைய அமைப்புக்களுடனும் சில விட்டுக் கொடுப்புகளுடனும் ஒவ்வொரு தனித் தனிக் கோரிக்கைகளிலும் ஐக்கியப்பட்டுச் செயற்படலாம். அத்துடன் ஒரு குறைந்தபட்சப் பொதுவேலைத் திட்டத்தின் கீழ் சில அமைப்புக்களுடன் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாகச் செயற்படலாம். இந்த அடிப்படையில் எமது கட்சி 1990களின் இறுதிப் பகுதிகளில் தேசிய ஜனநாயக இயக்கத்தில் ஜனநாயக, இடதுசாரி அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டது. அத்துடன் புதிய இடதுசாரி முன்னணியிலும் செயற்பட்டது. (அவை சந்தர்ப்பவாதச் சக்திகளினால் குலைக்கப்பட்டன). அதற்குப் பின்னரும் கட்சி ஐக்கிய முன்னணிகளை அமைக்கத் தொடர்ந்து முயன்று வருகிறது. தனித்தனிக் கோரிக்கை

களுக்காகவும் வெகுஜனப் போராட்டங்களிலும் கட்சி ஐக்கியப்பட்ட நட வடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. சில போராட்டங்களுக்கும் சர்வ தேசப் பிரச்சினைகளிலும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவ துடன் ஒத்துழைப்பு இயக்கங்களையும் நடத்தி வருகிறது.

தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறித் தனிக்கட்சி அமைக்க வேண்டிய தேவையை ஏற்படுத்திய முரண்பாடுகளில் மூன்றுலகக் கோட்பாடும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பானவையும் போன்று, ஐக்கிய முன்னணி நடவடிக்கைகள் பற்றிய முரண்பாடும் முக்கியம் பெற்றது. மேற்குறிப்பிட்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, திரிபுவாதத்திற்கு எதி ரான போராட்டத்திலும், பாராளுமன்றவாதம், தொழிற்சங்கவாதம் ஆகியவற்றுக்கு எதிராகப் புரட்சிகர நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதும் மூன்றுலகக் கோட்பாட்டை எதிர்த்தது. அப்போது நாம் இலங் கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்று இயங்கிய போது, அக் கோட் பாட்டை ஏற்றுக் கொண்டோம். தற்போது அது குறித்த சுயவிமர்ச னத்தை முன்வைக்கிறோம். தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்த்த அதேவேளை தேசிய இனப் பிரச்சினையில் தமிழ் மக்கள் தனியான தேசிய இனமல்ல அதனால் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இல்லை என்ற நிலைப்பாட்டைத் தோழர் சண்முகதாசன் தலைமை யிலான கட்சி கொண்டிருந்தது. எமது கட்சி தனிநாட்டுக் கோரிக்கை யை எதிர்த்த போதும் சிங்களவர்களையும் தமிழர்களையும முஸ்லிம் களையும் மலையகத் தமிழ் மக்களையும் தேசிய இனங்கள் என்றும் அவர்களது சுயநிர்ணய உரிமை ஐக்கிய இலங்கைக்குள் உறுதி செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தது. ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளில் தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்வம் காட்டவில்லை. எமது கட்சி ஆர்வம் காட்டியது மட்டுமல்லாமல் ஐக்கியப் பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் ஐக்கிய முன்னணிகளை அமைத்தும் செயற்பட்டு வந்திருக்கிறது.

**பண்பாட்டு ரீதியான போராட்டங்கள்**

ஏகாதிபத்திய பூகோளமய சூழலில் பண்பாட்டு அம்சங்கள் யாவும் புத்திஜீவிய சொத்துக்களாக்கப்பட்டு, நுகர்வுக்குரிய வர்த்தகப் பண்டங் களாக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏகாதிபத்திய முதலாளித்துவ, நிலப் பிரபுத்துவ, சாதிய, பெண்ணடிமை மற்றும் பிற்போக்கு ஆதிக்கவாத பண்பாட்டு அம்சங்கள் பாதுகாக்கப்பட்டுப் புதிய வடிவங்களில் முன்னெ டுக்கப்படுகின்றன.

பிற்போக்குப் பண்பாடுகளுக்கு மாறான புதிய முற்போக்கான சமூக விழுமியங்களும் சமூக மாற்றத்திற்கான வர்க்கப் புரட்சிக்கான சூழலும்

திடீரென ஏற்படமாட்டா. அவை நீண்ட தொடர்ச்சியான புரட்சிகரப் பண்பாட்டு வேலைகளினூடாக ஏற்படுத்தப்பட வேண்டும். புரட்சிக்கு முன்னரும், பின்னரும் பண்பாட்டு வேலைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இவை கட்சியினாலும் ஏனைய வெகுஜன அமைப்புக்களினூடாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனடிப்படையில் சோஷலிச சீனாவில் முன்னெடுக்கப்பட்ட பண்பாட்டுப் புரட்சியை ஏற்று அங்கீகரிக்கிறோம்.

விஞ்ஞானபூர்வமாக முடிந்த முடிவாகக் கண்டறியப்பட்ட விடயங்களைத் தவிர்ந்த ஏனைய விடயங்களில் நாம் பல கருத்துக்களுக்கும் அவற்றுக்கிடையிலான போராட்டங்களுக்கும் இடமளிக்கும் பன்மைத்துவ நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். சமூக மாற்றத்திற்கான வர்க்கப் புரட்சியை வெறும் பொருளாதார அடிப்படைகளுக்கு மட்டும் வரையறுக்கும் யாத்திரிகமான நோக்குடன் பண்பாடு போன்ற மேற்கட்டுமானங்களை அணுகக் கூடாது. இச் சமூக அமைப்பைக் கேள்விக்குட்படுத்தும் மனிதாபிமானப் பண்பாடு, எதிர்ப்புப் பண்பாடு போன்றவற்றுடன் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதுடன் சமூக அமைப்பை மாற்றும் பண்பாட்டை உயர்த்திப் பிடித்துப் பண்பாட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதே வேளை, இனவாத, மதவாத, சாதிய, ஆணாதிக்க, பாலியல் வாதக் கருத்தியல்கள், ஏகாதிபத்தியக் கோளாறுகளான என்.ஜி.ஓ. பண்பாடும் கருத்தியலும் பின்நவீனத்துவமும், தேசிய இனம், பெண்ணியம், தலித்தியம் போன்ற பெயர்களினால் வெறும் அடையாளத்தை மட்டுமே நிலைநிறுத்தும் போக்கு, சமூக உணர்வற்ற தனிநபர்வாதம், சுயநலம், அதீத மதுபாவனை, போதைப் பொருள் பாவனை, வன்முறை, பாலியல் வக்கிரம், நுகர்வுப் பண்பாடு, போட்டி பொறாமைகளைத் தூண்டி வளர்க்கும் பண்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றுக்கு எதிராகத் தொடர்ச்சியான புரட்சிகரப் பண்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மாக்சிச லெனினிச அடிப்படையில் சோஷலிஸப் புரட்சியை நோக்கிய தத்துவங்கள் எண்ணக்கருக்கள் போன்றவற்றைப் புரட்சிகரப் பண்பாட்டு அம்சங்களுடன் பிரசாரப்படுத்துவதும், அதனை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு வேலைகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே எமது பண்பாட்டு வேலைகள் தொடர்பான நிலைப்பாடாகும்.

புரட்சிகர அரசியல் வேலைகளும் பண்பாட்டு வேலைகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். புரட்சிகரத் தொழிலாளி வர்க்கப் பண்பாடு தொடர்பான ஆய்வுகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது கட்சித் தோழர்கள் கட்சியினுடைய நேரடிப் பண்பாட்டு நடவடிக்கைகளிலும் தேசிய கலை இலக்கியப் பேரவை, புதிய மலையகம், செம்மலர்கள் வீதி நாடகக் குழு போன்ற அமைப்புக்களினூடாகவும் ஏனைய வெகுஜன அமைப்புக்களினூடாகவும் பண்பாட்டு வேலைகளை முன்னெடுக்கின்றனர்.

கட்சியின் வெளியீடுகளாகப் புதிய பூமி, நியூ டெமொகிரஸி சஞ்சிகைகளினூடாகவும் செம்பதாகை இணையத்தள சஞ்சிகையினூடாகவும் புதிய பூமி வெளியீட்டாக நூல்களினூடாகவும் கட்சியின் இணையத் தளங்களினூடாகவும் கருத்தியல்ரீதியாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதிற் கவலைக்கிடமான விடயம் யாதெனில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு வேலைகள் இயக்கரீதியாக முன்னெடுக்கப்படவில்லை என்பதாகும். சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியிலான மனிதாபிமான, முற்போக்கு விழுமியங்களை நிலைநிறுத்தும் பண்பாட்டு நடவடிக்கைகள் இருக்கின்ற போதும் பின்நவீனத்துவமும் பிற சீரழிவுப் பண்பாட்டு நடவடிக்கைகளும் அதிகமாக இருப்பதைக் காணலாம்.

**வெகுஜனப் போராட்டங்களின் பகுதியாகத் தேர்தல்களில் பங்கெடுப்பது**

1978ஆம் ஆண்டு நமது கட்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் 1993ஆம் ஆண்டு வரை எல்லாத் தேர்தல்களையும் பகிஷ்கரிப்பது என்பது எமது கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. அதற்குப் பிறகு தேர்தல்களில் போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்ட போதும் எல்லாத் தேர்தல்களிலும் போட்டியிடுவது என்று முடிவெடுக்கப்படவில்லை. குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்ப, போட்டியிடுவதா இல்லையா என்று முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிடுவது என்று தீர்மானித்ததன் நோக்கம் பாராளுமன்றப் பாதையில் சமூக மாற்றத்தையோ புரட்சியையோ ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையினாலல்ல. மாறாக நன்கு ஸ்தாபிதமாகியுள்ள பாராளுமன்ற, ஜனாதிபதி ஏனைய தேர்தல் அரசியல் பாதையினால் சாதாரண தொழிலாளர், விவசாயிகள் ஏன் தேசிய இனங்களின் உரிமைகளையும் உறுதி செய்ய முடியாது என்பதையும் அவை சாதாரண மக்களின் கைகளுக்கு அதிகாரத்தை வழங்காது என்பதையும் மக்கள் உணர்ந்து ஏற்கும் வரை, அந்த அமைப்பை அம்பலப்படுத்துவதற்காகப் போட்டியிடுவதெனத் தீர்மானித்தோம். ஏனைய பூர்ஷுவா கட்சிகளுக்கு எதிராக வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வழிமுறையாகவே தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தோம்.

தேர்தல்களில் போட்டியிட்டு ஒரு ஆசனத்தையோ ஒன்றுக்கு மேற் பட்ட ஆசனங்களையோ பெற்றால் அவற்றைப் பயன்படுத்திச் சாதாரண உழைக்கும் மக்களின் குரலாக அந்தந்தச் சபைகளில் ஒலிப்பதுடன் போராடுவதுமே நமது நோக்கமாகும்.

கம்யூனிஸ்டுகள் ரஷ்யப் பாரளுமன்றமான டுமாவுக்குச் செல்வது டுமாவை இல்லாமலாக்குவதற்கே என்று லெனின் கூறியிருந்ததைச் சந்தர்ப்பவாத பாராளுமன்றத் தேர்தல் அரசியலை முன்னெடுப்பதற் கான சமாதானமாகக் கொள்ளாமல், உண்மையான அர்த்தத்தில் முதலாளித்துவத்தினைத் தோற்கடித்து சோஷலிஸத்தை நிலைநாட்டு வதற்குரிய ஒருவிதமான போராட்டமாகத் தேர்தலில் பங்கெடுப்பதைக் கொள்வோம். இதில் திரிபுவாதிகளிடமிருந்தும் ட்ரொட்ஸ்கிவாதிகளிட மிருந்தும் நாம் வேறுபடுகிறோம்.

தேர்தலும், தேர்தல் முடிவுகளும் அனைத்து மக்களினதும் அபிலாட் சைகளை வெளிப்படுத்தா. ஆனால் நன்கு ஸ்தாபிதமாகியுள்ள தேர்தல் அரசியலை வெறும் வாய்ச்சவடாலால் தோற்கடிக்க முடியாது. அதற் குப் பலமுனைளிலும் போராட வேண்டும். தேர்தலைப் பகிஷ்கரிப்பதும் பங்கெடுப்பதும், பங்குபற்றி வெற்றி பெற்றால், சாதாரண மக்களுக் காகக் குரல் எழுப்புவதும் வெகுஜனப் போராட்டத்தின் பகுதியாகக் கொள்ளப்பட வேண்டும்.

தேர்தலில் பங்கெடுப்பதன் நோக்கம் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதற்கோ, சீர்திருத்தி முகாமைப்படுத்துவதற்கோ அல்ல என்ப தைப் புரிந்து கொள்வோம். மக்களைப் பிளவுபடுத்திச் சீரழிப்பதற் கல்லாது, முதலாளித்துவ அமைப்பைக் கேள்விக்குட்படுத்தி, அதன் வரையறையை அம்பலப்படுத்தி அதனைத் தோற்கடிப்பதற்கான ஒரே வழியாகவன்றிப், பல போராட்டங்களில் ஒன்றாகத் தேர்தல் அரசிய லைக் கொள்வோம்.

**புரட்சிக்கான மார்க்கம் என்ன?**

நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களுடன் நவகொலனித்துவ-ஏகாதிபத்திய பூகோள மயமாதல் சூழ்நிலையில் இலங்கையை ஆளுகின்ற பேரின வாத முதலாளித்துவ, அதிகார முதலாளித்துவ வர்க்கங்களால் இலங் கை மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காண முடியாது. அதற்கு மாற்று விஞ்ஞான பூர்வமான சோஷலிஸமே ஆகும். அதற்கான புரட்சி அமைதியான முறையில் இடம்பெறவோ புரட்சி நிலைநிறுத்தப்படவோ ஆளும் வர்க் கங்களும், ஏகாதிபத்திய, பிராந்திய சக்திகளும் இடமளிக்கப் போவ தில்லை. அந்தப் புரட்சியை முன்னெடுப்பதற்கான முன்தேவையாகத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் பிரதான போராட்டச் சக்தி

களான விவசாயிகளும் பிற சுரண்டப்படும் வர்க்கங்களும் அடக்கப் படும் வர்க்கங்களும் ஐக்கியப்பட்டுப் புதிய-ஜனநாயகப் புரட்சியை ஏற்ப டுத்த வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடு.

இதனை முன்னெடுப்பதற்கான மார்க்கம் என்ன? பாராளுமன்றப் பாதையல்ல என்பது தெரிந்ததே. வெகுஜனப் போராட்ட மார்க்கமே புரட்சிக்கான எமது மார்க்கமாகும். அது பல முனைகளிலான பல போராட்டங்களையும் குறிக்கும்.

அந்தந்தத் தளங்களில் நடைபெறும் போராட்டங்களை ஊக்குவித்து வழிநடத்திக் கூட்டிணைத்து முன்னெடுப்பதுடன் அவற்றுக்கான மத்திய நிலையமொன்றை அமைத்து அவற்றை அடிப்படைச் சமூக மாற்றத் திற்கான வர்க்கப் போராட்டமாக மாற்றுவதும் வெற்றியடையச் செய்வ தும் எமது மார்க்கமாகிறது. வெகுஜனப் போராட்டத்தின் அவசியம் அதனுடைய ஆழ அகலங்கள் பற்றி 2007 மார்ச் மாத நியூ டெமொ க்ரஸி (24)இல் Discussion Paper என்ற தலைப்பில் கட்டுரையொன்று வெளியாகி இருந்தது. அது புதியபூமியிலும் வெளியாகி இருந்தது.

நாங்கள் மக்கள் மீது நம்பிக்கை கொண்டவர்கள் என்பதால், சரி யான வெகுஜனப் போராட்டங்களை ஆளும் வர்க்கம் ஒடுக்க முடியாது என்ற நம்பிக்கையையும் கொண்டுள்ளோம்.

வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது என்பது மக்களுக்கு விரோதமான ஆளும் வர்க்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்க ளின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஜனநாயக உரிமை ஆகும். அதற் கூடாக மக்கள் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். அதற்கூடாகச் சமூக மாற்றத்திற்கான வர்க்கப் புரட்சிக்குத் தயார் செய்யப்படுகிறார்கள். அதற்குத் தலைமை தாங்குவதும் வழிகாட்டுவதும் அதனை நெறிப் படுத்துவதும் மாக்சிச லெனினிசக் கட்சியின் பொறுப்பும் கடமையாகும்.

தோழர்களே எமது கொள்கைகளைச் சரியாக வகுத்துக் கொள்வ தற்காக இந்த அறிக்கைகள் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நாம் ஜன நாயகபூர்வமாகத் திறந்த மனத்துடன் கலந்துரையாடிப் பொது உடன்பாட்டிற்கு வருவோம். அந்த அடிப்படையில் எதிர்கால வேலை களைத் திட்டமிட்ட வகையில் முன்னெடுப்போம்.

***வாழ்க புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி!***

***வாழ்க மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை!***

***வெல்க புரட்சி!***

*****

www.tamilarangam.net

# செவ்வானம் சிவக்கச் செம்படை எழும்

## *இராகலை பன்னீர்*

செம்படை....
உயருது உயருது மேலே
செங்கொடி உயருது
உயருது உயருது உயரே!

சிவப்பாய்
ஓடுது ஓடுது குருதி
விரைவாய்
விடியுது விடியுது கிழக்கே (செம்படை)

மாவலிக் கரையில்
வெள்ளம் புரள்வதாய்
மலையக மானுடம்
முகிழ்த்து எழுந்தது! (செம்படை)

ஏய்த்த தலைகளை
எட்டி உதைத்து
எதிர்த்துச் செல்லுது
எதிரியை நோக்கி (செம்படை)

சீற்றம் மிகுந்த
சிங்கங்களாகி
நகங்களை விரித்து
நகர்ந்து போகுது! (செம்படை)

நூற்றியெழுபது
வருங்களாக
அடக்கி வைத்தவர்
கைகளை நொறுக்கும் (செம்படை)

நெஞ்சக் குமுறலை
நெருப்பாய் மாற்றி
அஞ்சிய வாழ்வின்
அவலம் போக்கும் (செம்படை)

*(நன்றி: புதிய தலைமுறை - இராகலை பன்னீர்,*
*தேசிய கலை இலக்கியப் பேரவை 1999)*

# உலை

## *ஜோஸெ மரியா ஸிஸொான்**

மார்கழியில் என் சிறைக்கூண்டை
நள்ளிரவில் ஒரு உறைகுளிர் அறையோடும்
பகலில் ஒரு வெதுப்பகத்துடனும்
ஒப்பிடுவேன்.

இப்போது வெய்யிற்காலம் என்பதால்
இதை நரகத்தோடு ஒப்பிடுகிறேன்.
எனினும் இதன் சிறிய அளவு கருதி
இதை ஒரு உலையோடு ஒப்பிடுகிறேன்.

இது ஒரு சீறும் உலை:
எ∴கைப் பதனிடுகிறது.
இது ஆறுதல் தரும் ஒரு உவமேயம்.

[*ஜோஸெ மரியா ஸிஸொான் பிலிப்பின்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் முக்கியமான கொள்கை வகுப்பாளருமாக இருந்து, பல ஆண்டுகளாக நாடுமீள இயலாத நிலையில், ஒல்லாந்தில் பிலிப்பின்ஸ் தேசிய ஜனநாயக முன்னணியின் ஆலோசகராகச் செயற்படுகிறார்.]

*(நன்றி: மறப்பதற்கு அழைப்பு
தேசிய கலை இலக்கியப் பேரவை 1999)*

***புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.***

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335
Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***